ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 2 | பிங்கள௵ சித்திரை௴ 1௳ | 1917-ம்௵ ஏப்ரல்௴ 13௳ | பகுதி 10

## கடவுள் வணக்கம்.

ஒன்றியொன்றி நின்றுநின்று மென்னையென்னை
யுன்னியுன்னும் பொருளலைநீ யுன்பாலன்பா
னின்றதன்மைக் கிரங்கும்வை ராக்கியனல்லே
னிவர்த்தியவை வேண்டுமிந்த நீலனுக்கே
யென்றுமென்று மிந்நெறியோர் குணமுமில்லை
யிடுக்குவார் கைப்பிள்ளை யேதோவேதோ
கன்றுமனத் துடனுடு தழைதின் றுற்போற்
கல்வியுங்கேள் வியுமாகிக் கலக்குற்றேனே.

உற்றுதுணை நீயல்லாற் பற்றுவேறொன்
றுன்னேன்பன் னுலகத் தோடியாடிக்
கற்றதுங்கேட் டதுமிதனுக் கேதுவாகுங்
கற்பதுங்கேட் பதுமமையுங் காணுநீத
நற்றுணையே யருட்டாயே யின்பமான
நாதாந்தப் பரம்பொருளே நாரணுதி
சுற்றமுமாய் நல்லன்பர் தமைச்சேயாகத்
தொழும்புகொள்ளுங் கனுகனமே சோதிக்குன்றே.

ஞானமே வடிவாய்த் தேடுவார் தேடு
நாட்டமே நாட்டத்து ணிறைந்த
வானமே யெனக்கு வந்துவந் தோங்கு
மார்க்கமே மருளர்தா மறியா
மோனமே முதலே முத்திநல் வித்தே
முடிவிலா வின்பமே செய்யுந்
தானமே தவமே நின்னைநா னினைந்தேன்
றமியனேன் றனைமறப் பதற்கே.

# ஆனந்தபோதினி

## பிங்களஹூ சித்திரைமீ 1௨

## பலருமறிந்த ஒரு பெரிய இரகசியம்.

---

நண்பர்களே! இப்போது நமதுநாட்டிற்கு நேர்ந்திருக்கும் பெருங்குறை யொன்றுளது. அதுதான் நமது நாட்டாரின் முன்னேற்றத்திற்குப் பெரிய முக்கிய இடையூறாயுள்ளது. அது கல்வியே யாகும். கல்வியடையாத எந்தநாடும் மேலோங்கிவாராது. ஆனால் கல்விக்கோ அளவில்லை. ஏககாலத்தில் நமதுநாட்டார் தங்கள் முன்னேற்றத்திற்கு வேண்டிய அளவு கல்வியையடைதல் சாத்தியமான காரியமன்று. ஆகையால் முதலில் ஆரம்பக்கல்வி கிடைத்தால் போதும். ஆரம்பக்கல்வியை யாவருமே கற்கவேண்டுமென்ற ஒரு ஏற்பாடிருந்தால்தான் நூற்றுக்கு ஐம்பதாவது தேரும். பிறகு தனவான்கள் உதவிசெய்து நமது தாய்நாடு முன்னுக்கு வரவேண்டுமென்று சிரத்தை யெடுத்துக்கொண்டால், கொஞ்சம் கொஞ்சமாவது உயர்தரக்கல்வியும் கிடைக்கும்.

நமதுநாட்டிலுள்ள கல்வியாளரும், ஜனத்தலைவர்களும் ஆரம்பக் கல்விக்காக பலவித முயற்சிகளையும் செய்துவருகிறார்கள். ஆனால் ஒருவிஷயத்தைக் கவனத்தில்வைக்காமலே நடக்கிறார்கள். அதாவது நமக்குவேண்டிய அவசியமான காரியத்தை நாமே செய்துகொள்ள வேண்டுமேயன்றி யின்னொருவருடைய உதவியை யெதிர்பார்க்கிற வரையில் நமதுகாரியம் நிறைவேறாது. இதை நிரூபிக்கச் சிறுவர்கள் வாசிக்கும் வாசகபாடங்களில் ஒன்றுண்டு. அது பெரும்பாலும் யாவர்க்கும் தெரிந்ததாகவே யிருக்கலாமாயினும், அவசியம்பற்றி ஈண்டு அதைச்சுருக்கமாய்ப் புகலுவாம். அந்தக்கதைக்கு "வானம்பாடியும் அதன் குஞ்சுகளும்" என்று பெயர்.

"ஒரு வானம்பாடிக் குருவி ஒரு நெல்வயலில் கூடுகட்டிக் குஞ்சு பொரித்திருந்தது. வயலில் நெல்முற்றி அறுக்கப்படும் காலம் நெருங்கிவிட்டதால் ஒருநாள் காலையில் இரைதேடச் செல்லும் தாய்ப்

பட்சி தன் குஞ்சுகளை நோக்கி "என் குழவிகளே, இந்தவயலில் பயிர் அறுக்கப்படும் காலம் வந்துவிட்டது. அப்படி நேரிட்டால் நீங்கள் மனிதர்கையிற் சிக்கிக்கொள்வீர்கள். அறுக்குமுன் நாம் வேறிடம் போய்விடவேண்டும். ஆகையால் இங்கு யாராவது வந்து வயலைப்பற்றி யேதேனும்பேசினால் கவனமாய்க் கேட்டு நான் வந்தவுடன் என்னிடம் கூறுங்கள்" என்று கட்டளையிட்டுச் சென்றது. அன்று மாலை தாய் வந்ததே, குஞ்சுகள், "அம்மா இன்று இந்த வயலின் சொந்தக்காரனும் அவன் மகனும் வந்து பேசிக்கொண்டார்கள். நாளை அண்டை வீட்டுக்காரரைத் துணைகூட்டி வந்து வயலை யறுத்துவிடவேண்டும் என்று சொந்தக்காரன் தன் புத்திரனுக்குக் கூறினான். ஆகையால் நாம் இன்றே போய்விடுவது நலம்" என்று கூறின.

தாய்ப்பட்சி "நாளைக்குப் பயமில்லை. அயலார் உதவியைக் கோருகிறவரையில் அவர்கள் காரியம் நிறைவேறாது. நீங்கள் பயமின்றி யிருங்கள். நாளையென்ன பேசிக்கொள்கிறார்களென்று கவனமாய்க்கேட்டுக் கூறுங்கள்" என்று மறுநாட் காலை வழக்கம்போல் ஆகாரம் தேடிவரச்சென்றது. அன்று மாலை குஞ்சுகள் தாயை நோக்கி "இன்று சொந்தக்காரன் தன் சுற்றத்தாரையாவது எப்படியும் அழைத்துவந்து நாளை வயலை யறுத்துவிடவேண்டும்" என்று மகனுக்குக் கூறினான்" என்று மொழிந்தன.

அன்றும் தாய்ப்பட்சி "ஆனால் நாளைக்கும் பயமில்லை" என்று கூறி மறுநாளும் போய்விட்டது. மூன்றாவது நாள் மாலை குஞ்சுகள் தாயைநோக்கி "இன்று வயலுக்குடையவன் தன் புதல்வனைநோக்கி 'நாம் அயலாரையும் சுற்றத்தாரையும் நம்பியது வியர்த்தமாய் விட்டது. இன்னும் ஆலசியம் செய்தால் நெல்மணிகள் உதிர்ந்துவிடும். ஆகையால் நாளை அதிகாலையில் வந்து நாம் இருவருமே அறுத்து விடவேண்டும்' என்று கூறினான்" எனவிண்டன. இதைக்கேட்ட தாய்ப்பட்சி "அவர்கள் எப்போது தங்கள் வேலையைத் தாங்களே செய்துமுடிக்கத் தீர்மானித்துக் கொண்டார்களோ, இனி அந்தவேலை தடையின்றி நிறைவேறிவிடும். ஆகையால் நாம் இனி ஆலசியம் செய்யாமல் வேறிடம்போய்ச் சேருவதே நலம்" என்று கூறி தன் குஞ்சுகளை யழைத்துக்கொண்டு போய்விட்டது."

ஆகையால் நமக்கு அவசியமான ஆரம்பக்கல்வியை நாமே தேடிக்கொள்ளாமல் அன்னியர் உதவியை யெதிர்பார்ப்பது நல

மன்று. துரைத்தனத்தார் ஆரம்பக்கல்வியைக் கட்டாயப் படிப்பாக்கி இலவசமா யளிப்பார்களென்று சிலர் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் அப்படிச்செய்ய வேண்டியவர்கள்தான். ஆனால் ஒருவர் ஒன்றைச் செய்யவேண்டிய கடமையை யல்லது பாத்தியதையை யுடைத்தாயிருத்தல் ஒன்று, அதைச்செய்ய விருப்பமும் சக்தியும் உடைத்தாயிருத்தல் வேறொன்று. அப்படிச்செய்தாலும் துரைத்தனத்தார் பொதுவான கல்விமட்டில்தான் தாங்கள்ஸ்தாபிக்கும் பாடசாலைகளில் கற்பிக்கச்செய்வார்கள். நமக்கோ சாதாரணக் கல்வியோடு இலௌகீக மதாசார ஒழுக்கங்களைப்பற்றிப் போதிக்கும் கல்வியும் அவசியமாய் வேண்டியது. இதற்கு நம்மால் ஏற்படுத்தப்படும் பாடசாலைகளே தகுதியானவை.

ஆரம்பக்கல்வியை நமது முயற்சியால் தேடிக்கொண்டால் பிறகு உயர்தரக் கல்விக்காக துரைத்தனத்தார் உதவியைக் கோரலாகும். நமதுநாட்டில் ஆரம்பக்கல்வியை யிலவசமா யளிக்கக்கூடிய செல்வந்தர்கள் இல்லாம லில்லை. ஆனால் அவர்கள் பெரும்பாலும் கல்விதவிர மற்ற விஷயங்களிலேயே தமது தான தருமங்களைச் செய்கிறார்கள். ஏனெனில் வர்த்தகம் கைத்தொழில் விவசாயம் இவைகளில் செல்வத்தைச் சம்பாதிக்கும் அவர்களுக்குக் கல்வியின் அருமைதெரியாது. "கல்வியிருந்தால் செல்வமில்லை. செல்வமிருந்தாற்கல்வியில்லை" என்பதே நமது நாட்டுப் பழமொழி. இச்சந்தர்ப்பத்தில் செல்வந்தர்களை நாம் தூஷிப்பதாய்க் கருதவேண்டாம். குற்றம் இன்னதென்று தெரிந்தாலன்றி அதை நீக்க வழியில்லை. வியாதியின்னதென்று தெரிந்தாலன்றி அதற்குத்தக்க ஔடதம் ஏற்படாது. பெரும்பாலான நமது நாட்டுச் செல்வந்தர்களுக்கு கல்வியில்லாததால் தங்கள் மக்களுக்கு உயர்தரக்கல்வியை யளிப்பதில்லை. கல்வியின் அருமை பெருமையும் அவர்களுக்குத் தெரியாது. ஆதலால் கல்வியிருந்தால் இதேவர்த்தகமும் கைத்தொழிலும் எவ்வளவோ அதிகமாய்ப் பிரகாசிக்குமே, அதிகவருமானமும் வருமே யென்பதை யவர்கள் அறிவதில்லை. வீணான கௌரவத்திற் காசை வைத்தும், சொல்ப சம்பளக்காரனாயிருந்தாலும் துரைத்தன உத்தியோகஸ்தனென்றால் அவனை அரசனென்றும் மிக்க கௌரவபதவியிலிருப்பவனென்றும் அஞ்சித் தங்கள் செல்வத்தைச் செலவழிக்கிறார்கள். தங்களுக்கிருக்கும் கௌரவ நிலைமையை யுணர்கிறார்களில்லை.

அந்தோ, இச்செல்வந்தர் உண்மையை யறிந்து, இப்போது நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டியது கல்வியென்பதை யுணர்ந்து, அந்தத் தருமத்தில் பொருளைச்செலவிடுவார்களாயின் எவ்வளவோ புகழும் புண்ணியமும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இதோடு கிராமங்கள்தோறும் பாடசாலை யேற்படுத்தி ஆரம்பப் படிப்பை யிலவசமாகச் செய்யலாகும். அதற்கு கிராமத்தார் முயற்சி யொன்றே வேண்டியது. அவ்வாறு முயற்சிசெய்து அவர்கள் கட்டுப்பாடாய் எவ்வளவோ காரியங்களைச் செய்கிறார்கள். கோயில்களைக் கட்டுகிறார்கள், உற்சவங்களைச் செய்கிறார்கள். ஒருகிராமத்தில் கட்சி யுண்டாய்விட்டாலோ ஒரே கோயிலுக்கு இரண்டு திருவிழாக்கள் செய்கிறார்கள். சமயம்நேர்ந்தால் ஹைகோர்ட்வரையில் வியாஜ்ஜிய மாடுகிறார்கள். இக்காலத்தில் கிராமங்களில் யாவருமே விவகாரமறியாதவர்களாயும் கல்வியில்லாதவர்களாகவுமில்லை. சிற்சிலராவது கல்வி யறிந்தோ ரிருக்கிறார்கள். இத்தகையோர் முன்வந்து கிராமஜனங்களுக்குக் கல்வியின் அவசியத்தைக்கூறி ஒருகிராமத்தில் ஒருபாடசாலை யேற்படுத்துவது அசாத்தியகாரியமாகாது. மனம் வைத்து முயன்றால் ஆண்டவன் எப்படியும் உதவிபுரியாமற் போகார்.

ஆகைபால் நமது நண்பர்களும் நமது நாட்டின் முன்னேற்றத்தைக்கருதி யேற்பட்டிருக்கும் சங்கங்களும் சபைகளும் இதுவிஷயத்தில் சிரத்தை யெடுத்துக்கொண்டு விவகாரம் செய்கையில் நடைபெறும்படி செய்வார்களென்று பிரார்த்திக்கிறோம். கருணாநிதியாகிய சர்வேஸ்வரன் அருள்புரிவாராக.

---

## சந்தாநேயர்களுக்கு ஓர் அறிவிப்பு.

சந்தாநேயர்களாகிய அன்பார்ந்த நண்பர்காள் !

கடந்த சஞ்சிகையில் காகிதம் முதலிய அச்சுசாமான்களின் அதிகவிலையைப்பற்றியும் அதற்காகச் சந்தாவை யுயர்த்தும் விஷயத்தைப்பற்றியும் வரைந்துள்ளோம். அதைக்கண்ணுற்ற நண்பர்களில்பலர் நமதுசஞ்சிகையின் தன்மையையும் அதை வெளியிடுவதில் நேரிடும்செலவையும் கருத்திலுன்னிச் சந்தாவை யுயர்த்தும்படி எழுதியுள்ளார்கள். பழையசந்தாதாரர்களில் அனேகர் தாங்களும் 4—அணா கூட்டி ஒருரூபாயாக சந்தாசெலுத்துவதாய் எழுதி யிருக்கிறார்கள்.

ஒரு நண்பர் " இக்காலத்தில் கல்வியின் அருமையையும், பத்திரிகைகளால் அடையும் பயனையும் இன்னும் நன்குணராதவர்கள் பலர் நம் நாட்டிலிருப்பதால் அத்தகையோர் ஒரு ரூபாய்க்குமேல் கால்ரூபாய் அதிகமாவதைக்கண்டு பீதி யடைவார்களேயன்றி இத்தகைய சஞ்சிகைக்கு கால்ரூபாய்மட்டுமல்ல அரை

ரூபாய் கூட அதிகமாய்க் கொடுக்கலாகும் " என்ற உண்மையை யறியமாட்டார்கள். ஆகையால் ஒருரூபாய்க்குமேல் உயர்த்துவதைச் சற்று சிந்தித்தே செய்வது நலம் " என்று கூறுகிறார்.

நண்பர்களே! ஒருரூபாய்க்குமேல் சந்தாவையுயர்த்தவேண்டுமென்ற எண்ணமே நமக்கில்லை. கடவுள் தயவால் இந்தக்கொடியயுத்தம் ஒழிந்ததே, இந்த ஒருரூபாய் சந்தாவிலேயே சஞ்சிகையை யின்னும் விர்த்திசெய்யவேண்டும் என்பதே நமது மனப்பூர்வமான கோரிக்கை.

நமது நாட்டில் அனேகம் பத்திரிகைகள் சஞ்சிகைகள் வெளிப்படத் தொடங்கி இரண்டுமாதம் மூன்றுமாதம் நடைபெற்று பிறகு உறங்கிவிட்டன. ஆகையால் நமது ஆனந்தபோதினியும் அவ்வாறே யிடையிற்றுஞ்சிவிடுமோ வென்ற ஐயங்கொண்டு அனேகர் ஒருவருடங்கழிந்தபிறகே சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தார்கள். ஆனால் நமது ஆதிநண்பர்களாகிய முதல்வருடச் சந்தாதாரர்களோ நமது குழந்தையைக்கண்டவுடனே, இது நன்மை பயக்குமோ பயக்காதோ, நீண்ட ஆயுள்பெற்றிருக்குமோ, அன்றி பாலக்கிரகதோஷம்கண்டு குழவிப்பருவத்திலேயே இறக்குமோவென்ற ஐயம் சற்றுமின்றி, அன்போடு இருகரத்தாலும் தழுவியேந்திக்கொண்டு ஆதரித்து வருகின்றனர்.

அவ்வாறிருக்கச் சகல சந்தேகமும் நீங்கியபின் சேர்ந்த இரண்டாம்வருட சந்தாதார்கள் " முதல் வருட சந்தாதாரைவிட ஆனந்தபோதினிக்கு நாங்களே கால்ரூபாய் அதிகமாயளித்து ஆதரிக்கிறோம் " என்ற கௌரவத்தை வகித்தவர்களாகத் தங்களைக் கருதிக்கொள்கின்றனர்.

ஆகையால் நமது ஆதிநண்பர்களாகிய முதல் வருடச் சந்தாநேயர்களும் அடுத்தவருடம்முதல் அந்த நான்கணாவைக்கூட்டி மற்றையரைப்போல் ஒருரூபாயாகச் செலுத்திவிடின் அக்குறை நீங்கிவிடும். "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே—இடுக்கண் களைவதாஅ நட்பு" என்று நாயனார் அருளியபடி அவசியம் நேர்ந்தபோது வலிய உதவி செய்வதன்றோ நட்பாளர் கடமை? ஒருவருடத்திற்கொருமுறை நல்லவிஷயத்திற்காக, அதிலும் நமது சந்ததியார் மேலோங்கிவந்து க்ஷேமமடையவேண்டிய விஷயத்திற்காக செலவுசெய்வது ஒருபெரியகாரியமென்று நம் நண்பர்கள் கருதார்களென்பது திண்ணம். சற்று சிந்தித்துப்பார்க்கின் சிறிதும் பயனளிக்காவிஷயத்திற்காகத் தினந்தோறுமோ, வாரத்திற்கொருமுறையோ ஒரு கால்ரூபாயல்ல இரண்டுமூன்று கால்ரூபாய்களைக்கூட அலட்சியமாய்ச் செலவழித்து விடுகிறோமென்று நம்மனதிற்கே நன்குவிளங்கும். ஒருவர்க்கு வருடமொருமுறை நாலணா செலவிடல் அலட்சியமேயெனினும், " பலதுளிபெருவெள்ளம் " என்பதுபோல் நமது ஆனந்தபோதினிக்கு அது மிக்க உற்சாகத்தையும் உதவியையு மளிக்குமென்பது திண்ணம். நமது முதல் வருட நண்பர்கள் சந்தோஷத்தோடு இதற்கு உடன்படுவார்களென்று நம்பியே யிதை வெளியிட்டோம்.

இச்சண்டை கூடியசீக்கிரத்தில் ஒழியுமென்றே கருதப்படுகிறது. அதுமுதல் நமதுசஞ்சிகையைப்பக்கங்கள் அதிகமாகவும் உருவம்பெரிதாகவும் விர்த்தி

செய்யவேண்டிய ஏற்பாடுகளை யிப்போதிருந்தே சிரத்தையோடு சிந்தித்து வருகிறோம். சொல்லாமற்செய்வதே நலமாதலால் அந்த விவரங்களை யீண்டு கூறுவது உசிதமாய்ப் புலப்படவில்லை.

---

## சசிவர்ணபோதம்

(298-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஜீவராசிகட்கேற்பட்ட அளவுகாலம வரை (அதாவது சடத்தை விட்டுச் சீவன்நீங்கும்வரை) இத்தோற்றங்கள் தக்கவாறு தம்அறிவை முன்னிட்டோ மனப்போக்கை முன்னிட்டோ நல்வினை தீவினைகளை நயந்து செய்துகொண்டே வருகின்றனர். இவ்வாறு செய்துவரும் இருவகைக் கருமங்களும் ஒருங்கே சேரப்பெற்றுப் படிப்படியாய்ப் பொலிந்து அவரவரிடத்திலேயே அந்தர்யாமியாய் அமைந்திருக்கின்றன.

ஏற்கனவே தம்முள் வாய்க்கப்பெற்ற யெளவன கெளமார காலத்தே பெருகி விரிந்தெழும் வித்தினால் உண்டாகும் உணர்ச்சியின் அவாவைத் தீர்த்துக்கொள்வான் செயல்புரிய அக்காலத்தே தத்தமக்குள்ள குணப்பண்புகளையனுசரித்து வெளியாகும்வித்தானது கருப்பையிற் பாய்ந்து உருப்பெற்று முறையே பரமத்தின் செயலால் தக்கவாறு வளர்ச்சிபெற்று மீண்டும் சீவ சிருஷ்டிகளான சீவர்களாய்த் தக்கவாறு ஜனனமாகின்றன.

கருமச் செயலாற் கனிந்து வளர்ந்த முந்திய சீவராசிகள் தந்தனு வொடுங்குங் காலத்தே சடத்தைவிட்டு நீங்குகின்றனர். இச்சீவராசிகள் இறக்கும்வரை தாமியற்றியுள்ள இருவினைகளின் மொத்த எண்ணிக்கைக்குச் சஞ்சிதம் என்று பெயர்.

அதாவது அனுபவிக்காம லிருக்கிற கர்மக் கூட்டங்களாம்.

இவ்வாறு வரிசைக் கிரமமாய்த் தாஞ்செய்த கர்மத்தொகுதியாஞ் சஞ்சிதத்தின் பலனைக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பகுத்துப் பகுத்துப் பிரித்த ஒவ்வோர் பாகத்தின் செயலுக்குத் தக்கவாறு ஜனனமெடுத்து அவைகளை யனுபவித்தே தீரவேண்டுமென்பது தேவவிதி. இவ்வோர் பாகத்தின் செயல்களுக்கு ஓரே ஜனனமெடுத்து அனுபவிப்பதும் அல்லது பற்பல ஜனனங்களெடுத்து அனுபவிப்பதுமான இருவகைகளுண்டு. ஓர் பாகத்தின் செயலுக்காக தக்கவாறு சனனமெடுத்து அல்லது அனேக ஜனனங்களெடுத்து அனுபவிப்பதன் விதிக்குப் பிராரப்தம் என்று பெயர்.

முந்திய சீவர்கள் தாஞ்செய்த கர்மத் தொகுதிகளைப் பகுதிப் பகுதிகளாய் அனுபவிக்குமாறு மீண்டும் உலகிலேயே பிறக்கவேண்டும். இந்தப்படி தக்கவாறு ஜனித்து அனுபவித்து அதனுலெய்தும் பலன்களை நுங்கிநுங்கி ஆதியிற் செய்த தவமுண்டில்லை யென்பதற்கு ஆளடிமையே சாக்ஷியாம், என்ற அனுபவத்தை மறந்து இகத்தே மீண்டும் சீவனுர்த்தமாகவும் பூர்வஜன்மவாசனை வசத்தினுலும் புதிதான புண்ணிய பாவகர்மங்களைச் செய்ய நேரிடுகிறது. இச்செய்கைகட்கு ஆகாமியம் என்று பெயர். இப்புதிய கர்மங்களின் தொகுதியானது ஏற்கனவே பூர்வஜனனமுதற் கூட்டமாயுள்ள சஞ்சிதத் தொகுதியிற் சேர்ந்துவைகும்.

(மாயா சக்தியினுற் கலங்கிக் கலந்து பெருகி வளர்ந்தோங்கி யெழும்பிச் சுற்றிச் சுழன்று நிலைபெறுமயக்கங்கொண்டு வருந்தித் தியங்கி எண்ணிலாக் கருமச் செயல்களை யெண்ணியுழலும்) மனத்தினுல் (பூர்வஜெனன) வழக்க வாசனைப்படி யியற்றப்படும் கருமத் தொகுதிகளோ எண்ணிறந்தன. தம்மால் (வெளிப்படையாய்) விளம்பப்படும் கருமக்கூட்டங்களோ கணித்தற்கடங்காதன. இவற்றுட் சீர்பெறச் சிந்தித்துச் செய்யப்படுவனவோ சிந்தைக் கெட்டாதன.

ஹே ! சுகுண சுந்தர ! மனது அபூர்வமாய் சுழுப்தியிலழுந்த நேருங்காலந்தவிரச் சாக்கிர சொப்பன காலங்களை யுள்ளிட்ட ஓர் தினத்தின் ஒரு ஜாமக்கழிவு நேரத்தினூடே மேற்கண்ட கருமத் தொகுதிகளடங்கிய எண்ணக்கழிவுகள் நிகழ்ந்து சேர்ந்து சேர்ந்து பெருகி நெருங்கி நையுமென்றுல், ஓர் தினத்திலாவது தினத்தின் ஓர் பகலிலாவது மனோ வாக்குக் காயங்களால் நிகழும் கருமங்களின் தொகுதிகளைக் கணித்து எவரால் எவ்வாறு எடுத்தியம்பற் பாலதாகும். ?

இத்தகைய கண்புதைந்த மாந்தராற் கருதப்படுவன கணக்கிலவாயினும், அக்கருமங்களின்படியே (ஒவ்வொன்றையும் அடைந்து அனுபவிக்க) முயற்சித்து முயற்சித்துச் செய்தும் அவைகள் இடையினும் இறுதியினும் முற்றுதொழிந்துபோவ தளவிலவாயினும், அவைகளினூடு யெஞ்சிநின்ற இரண்டொன்றே (வினைப்பயனைத் தழுவி) எத்தனப்படி முடிவதாம். வினைவயத்தாற் றெய்வ யெத்தனங்கொண்டு தன் எண்ணப்படி யியன்ற இரண்டொரு கருமங்களினுலும் அமைதியடையாது அதனைக்கொண்டே மேன்மேலும் விரித்

துக் கருதுவனவோ மிகப்பல. ஆகவே இக்கருத்துகளை அளவிலா எண்ணச் சூத்திரங்களெனப்படும்.

கணக்கிலாக் கருமங்கள் ஜனித்து அதனுட் பொதிந்து பொலிந்து பரந்து விளங்குவதான ஓர் எண்ணத்தையே கருமசூத்திரமென்பது.

அப்பா! இவைகள் ஆசையால் உண்டாவன. இவ்வாசையே பிறவிக்கு வித்தென்று சொல்லப்படுகிறது. இயற்கை யறிவு தோன்றிய காலம் முதல் இறக்குங்காலம்வரை யியன்றுள்ள எண்ணக்கூட்டங்கள் யாவும் இம்மையிலேயே சனித்து வித்துகளாய் முதிர்ந்து ஒவ்வொன்றுய் முறையே மறுமை மறுமையான ஜனனங்களைத் தந்து சதிக்கின்ற காரணத்தால் எண்ணிலாப்பிறவிகள் வந்தெய்திப் பிறக்கவும் இறக்கவும் நேரிடுவதால் இதனை ஜனனசாகரமென்று சாற்றலாயிற்று. இதனாலேயே மரணபவங்களான புனலையுடையது என்றனர் மேலோர்.

கவனித்துக்கேள்! இகத்தே ஒவ்வொருவரும் தாங்கள் அடைய வேண்டிக்கொள்ளும் சுகப்பேறுகளை யுன்னி யுன்னித் தம் மனத்தைக் கிண்டி தங்கள் இஷ்டப்படி யெண்ணங்களைப் பெருக்கி விருத்தி செய்துகொள்ளுவதால் உதித்த அவ்வெண்ணங்கள் அனுபவித்து ஓய்ந்துபோவதற்கிடமின்றிப் பொங்கிப் பொங்கிக் கடல்போல் பெருகிப் புழுங்கிப் புந்தியினூடே வைகுங்காரணத்தாற் சஞ்சலமாகிய மனனசாகர மென்றும் இதனைக்கூறுவதுண்டு.

இதனாலேயே இப்பிறவிப் பெருங்கடலானது ஒவ்வொருவருக்கும் தத்தம் மனத்தினுட்டங்கி யிருப்பதேயன்றி இப்புவியாகிய புறத்தே ஓரிடத்தேனும் இல்லையென்பதாயிற்று.

சசிவர்ண! இச்சனனசாகரத்தினுள் நிறைந்து உலவுவனவற்றை யுரைப்பக்கேள். கிட்டப்பெறாது கொள்ளும் அதிருப்தியாகிய உவர்ப்பு நிறைந்து அதனாலுதிக்கும் விசாரங்களால் ஆற்றாது மெய்வருந்திக் கர்ச்சித்து முழங்கி யுழலும் மோகப் புணரியூடே இன்பதுன்பங்களாக ஒன்றற்கொன்று இரைச்சலிட்டு மாறிமாறி விரைந்தோடி மோதி யவ்வாரியினூடே அமிழ்ந்து அரற்றும் அலைகளோ அளவிறந்தனவாம். இதனாற் சுகதுக்கங்களென்ற இரண்டும் ஒவ்வொருவரும் தமக்குத்தாமே யியற்றி யனுபவிக்கப்படுவதேயன்றி நிஷ்காரணமாகப் பிறரால் வந்தெய்துவனவல்ல வென்பதாயிற்று. மேலும் நாணமேலிட்டு நைந்து வாடி வதங்கி வளங்குன்றி

வடவையோடி வாரியிலழுந்தவும், ஊழித்தீயோடிப்பதுங்கவும் கடிந்தெழுந்து காய்ந்து காயங்களைக் கசித்து கனன்று ஓங்குங் காமத்தீயைக் கடுவாகக்கொண்டு கலைமதியினைக் கவ்வியுண்டு உலவும் கட்செவிக் கணங்களோ, அங்கு கணக்கிலாதன. இதனால யௌவனவத்தையாலாகிய காமவொழுக்க மிகுதியின் மயக்கத்தால் விஞ்ஞானமோங்கி மேலிடாது மெலிந்து நாளடைவிலே நசிக்குமென்பதாயிற்று.

ஹே பால! பிரவிர்த்திமார்க்கத்திற் கேதுவாய பல விடயங்களை விடாது பார்த்துப் பிடித்து நாளும் புசித்து நடந்துழலும் கணக்கற்ற மச்சகணங்களாகிய கரணங்களோ, விசாலமான இப்பிறவிக்கடலிலே பரந்து கிடக்கின்றன. இதனால் மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆகிய இந்நான்கும் தம்பிழைப்புக் கேதுவன்றுகொண்ட உலகவிவகாரங்களுக்கே நாளும் உழைத்து, இறுதியிற் காமியத்திலேயே ஒடுங்குகின்றன. பாரமார்த்திக சிந்தனையின்றி ஒருவன் இதர விஷயங்களிலேயே, தன் வாழ்நாளைக் கழிப்பானாயின் அவன் வாழ்க்கையை யென்னென்றுரைப்பது? இவ் வையகமும் அவன் ஓர் மனிதனென்று மதிக்குமோ? அவன் பூமிக்கோர் பளுவான கல்லென்றன்றோ எண்ணப்படுவான்.

மேலும் தன்னை வந்தடைந்த செல்வவளங்களைக் கண்டு அழியாப்பொருளென்றெண்ணி நம்பி இருமாந்து செருக்கி அதனினின்று மேன்மேலும் பொங்கி யெழுந்து முறையே சென்று இந்தியப் புழைகளை (துவாரங்களை) யடைந்து உச்சியிலோடி மோதி மெய்ம் மயக்கி நிலைபெறாது வழிந்தொழுகும் களிப்பெனும் நீர்ப்பெருக்கையும் எவரையும் மதியாப் பெருமிதத்தையுங்கொண்டதிப் பிறவிப் பெருங்கடல்.

என்னே! ஆச்சரியம், "முந்திவரு மூவரையுந் துரத்திவிட்டேன், முனிவரெலாங் கிடுகிடென நடுங்கச்செய்தேன்.—அந்த மூளதேவரெலா மாளப்பெற்றேன், அவனிதனிலெனக்கிணையா யாருமில்லை.—இந்திரனைப் பிடித்தடித்துச் சிறையில் வைத்தேன், எமதருமராஜனையும் ஏவல்கொண்டேன்.—எந்தனுக்கு யான் தெய்வம் வேறொன்றில்லை, யென்னரசும் செங்கோலும் என்றும் வாழ்க" என்றிருந்த மாவீரரெல்லாம் இறுதியில எவ்வாறாயினர். (அவ்வாறு அகங்கொண்டிருந்தவன் இரணியசூரன்.)

ஹே, சீரிய ஞானகோசரங்களைச் செவியாற்கொண்டு சிந்தையிற் சேர்க்கும் சிதானந்தச் செல்வத்தினகர !

அஞ்சுசென்னி யுண்மையா லரர்க்குயானு மொப்பென
நெஞ்சிலுன்னிமெய்மதத்த நீர்மையைக்கொடல்லவோ
கஞ்சமன்ன கண்ணனுபி யுட்பிறந்த கடவுடா
னஞ்சமுண்டகண்டனுலோர் நான்முகத்தனனதே !

என்பதை யறிந்து அடங்கி நிற்றல் வேண்டும். (தொடரும்)

---

## காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

என்பது, யாவருமறிந்த ஓர் சாமானிய பழமொழி. இதினின்றும் நாம் தெரிந்துக்கொள்ளவேண்டிய விஷயங்கள் பல. இது பயிரிடுவோரை நோக்கியே கூறப்பட்டதாய்த் தோற்றினும், இதன் கருத்தை நோக்குமிடத்து யாவர்க்கும் இன்றியமையாததே. 'சமயம் வாய்த்துள்ளபோதே காரியத்தை முடித்துக் கொள்' என்பது, இதன் பொதுப்படையான பொருள். இதனுல் முக்கியமாய் நாம் அறியவேண்டியவை யாவை ? என்பதை ஈண்டு ஆராய்வாம்.

உலகத்திலுள்ள எல்லாப் பிறவிகளிலும் சிறந்ததும், பெருதற்கருமையுமானது மானிடப்பிறவியே யென்பது வெளிப்படை. ஏனெனின், ஐயறிவுயிர்களாகிய பசு பக்ஷிகளைப்போலன்றி, இது நன்மை இது தீமை யெனப் பகுத்தறியும் ஆறுவது அறிவையுமுடைமையாலென்க. "மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்றுர் தொல்காப்பியரும். உயர்திணையாகக் கூறப்படுவதும் இக் காரணம்பற்றியே. நிற்க. பிறவியானது எத்தன்மையதாயினும் துன்பத்திற் கிடமானதே.

தோன்றிநின் றழியப்படுங் கொடும்பிறப்பிற்
றுன்பமே யன்றி யெட்டுணையு
மூன்றி நெஞ்சகத் தோர்ந்திடிற் பிறிதிலை. (வைராக்கியசதகம்)

இதன் உண்மை ஆழ்ந்து யோசிப்போர்க்கே இனிது விளங்கும். ஏனையோ ரறியார். இது நோக்கியே மேற்கூறிய செய்யுளில் "ஊன்றி நெஞ்சத் தோர்ந்திடில்" என்றுர். அவ்வாறு ஆழ்ந்து யோசிக்குமிடத்து எள்ளளவேனும் இன்பமில்லை யென்பார், "எட்டுணையும்" என்றுர்.

தருமி யென்னும் அந்தணர்க்காகத் தாம் அருளிச்செய்ததாகிய "கொங்குதேர்வாழ்க்கை..." என்னும்பாசுரத்திற்கு நற்கீரர் குற்றங்கூறியதையுணர்ந்த ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள், "நம் பாடலுக்குங் குற்றமா" எனச் சினந்து தம் நெற்றிக் கண்ணைக்காட்டலும், 'நெற்றிக் கண்ணைக் காட்டினுலும் குற்றம் குற்றமே' என எதிர்த்துக்கூறியவரும், தமது கல்விச்செருக்கால், நூல்களைச் சங்கத்திலரங்கேற்ற வருகின்ற புலவர்களைப் பெரிதும் அவமதித்து வந்தவருமாகிய கீராதி சங்கப்புலவரது தருக்கை யழித்த தெய்வப்புலவர் திருவாய்மலர்ந்த குறளில், "மாணுப்பிறப்பு" (இன்பமில்லாதபிறவி) என்பதற்கு, 'நரகர்,

விலங்கு, மக்கள், தேவர் என்கிற நால்வகைப் பிறவிகளிலும் உள்ளது துன்பமே யாதலால் மாணப்பிறப்பென்றார்' என்னும் பரிமேலழக ருரையையும் காண்க. பிறவியை துன்பக்கடலென்றே கூறப்பட்டிருக்கிறது.

இப்பிறவி யென்னுமோ ரிருட்கடலின் மூழ்கியா
னென்னுமொரு மகரவாய்ப்பட்டு (தாயுமானவர்)

சுழிதரு பிறவியென்னும் சூழ்திரைப் பட்டுச்சோர்வுற்
றழிதரு துயரநேமி யகன்றிடல் வேண்டும் (கந்தபுராணம்)

என்பவற்றையும் காண்க.

சகடக்கால்போல மாறிமாறிவரும் இப்பவ சாகரத்தைக் கடக்கவேண்டியே அருந்தவ மியற்றினர் நந்தாயுமானர் முதலாய மகான்களெல்லாம். நாமும் அம் மார்க்கத்தை யறிந்து என்றுமழியாப் பேரின்பமாகிய மோக்ஷத்தை யடைய முயலல் வேண்டும். இதை யறிதலே அறிவு. அறிந்தோரே அறிஞர்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு."

என்றார் நாயனரும். ஆயின் அம்மார்க்க மென்னையோ? வெனின், யாக்கையின் நிலையாமையையும், இடைநடுவிற் குறிக்குமிச் செல்வத்தின் நிலையின்மையையும் உணர்ந்து இயல்வது காவாம லிரப்போர்க்கீந்து, கடவுளாலும், அவனருள் பெற்றோராலும் பல நூற்களின் மூலமாய் கூறப்பட்டிருக்கும் விதி விலக்குகளையறிந்து, அதன்படி நடந்து, ஐயத்தினீங்கிய வாசிரியனை யடைந்து, அஞ்ஞானத்தையகற்றி,

"அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தலரிது."

என்னும், தேவர் திருவாக்கின்படி கருணையங்கடலாகியும், "அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகியும்," "உலகம் யாவையும் தாமுள வாக்கலும், நிலை பெறுத்தலு நீக்கலு நீங்கலா, அலகிலா விளையாட்டுடையவனு" முள்ள சர்வேஸ்வரனை, முக்கரணங்களும் ஒருமித்துப் போற்றிப் பணிதலேயாம். இவைகள் இம்மானுட ஜென்மத்தாலன்றி முடியாது. இது பற்றியே இப்பிறவி மேன்மையும், பெருதற்கருமையுமானதென எண்ணப் படுகிறதென்பதை மீட்டும் மொழிதல் மிகையாகாது. ஆயினும் எனதருமைச் சோதர சோதரிகாள்! யாக்கை நிலையற்ற தென்பதை மாத்திரம் ஒருபோதும் மறவாதிருக்கவேண்டும். மறவாமல் மனத்திடை யிருத்தவேண்டியவைக ளெல்லாவற்றினும் முதன்மையானதிதுவே. மறந்தோமாயின் அதைவிடக் கேடு வேறில்லை.

இறப்பெனு மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனு மதனின்மேற் கேடுமற் றுண்டோ
(கம்பராமாயணம்)

உயிர்களுக்கு உறங்கலும் விழித்தலும்போல, இறப்பும் பிறப்பும் இயல்

பாகக் கடிகிலே மாறிமாறி வரும் நீர்மேற் குமிழி போன்றது. இது அழியுங் காலம் 'இப்பவோ பின்னையோ இன்னும் சற்று நேரத்திலோ' வறியோம். இன்றையதினம் இருப்பவனை நாளைக்கு இருப்பானென் றெண்ணவோ திடமில்லை. நேற்றிருந்தான் இன்றிறந்தா னென்னும் பெருமை யுடையதில் வுலகம்.

பிறந்திடு முன்செலும் பிறந்த பின்னர்மெய்
துறந்திடுஞ் சிலபக லிருந்து துஞ்சுமால்
சிறந்திடு காளையிற் றேயு மூப்பினி
லிறந்திடு மதன்பரி சியம்ப லாகுமோ? என்பது கந்தபுராணம்.

இப்பிறவி தப்பினல் எப்பிறவி வாய்க்குமோ, மானுட தேகமே கிட்டுமென் றெண்ணுமா றெங்ஙனம்? அதுவும் சந்தேகமே. இப்பிறவியிலேயே எவ்வளவோ சங்கடங்களிருக்கின்றன.

சாதாரணமாக ஒருவன் நூறு வருடம் ஜீவித்திருக்கலாம்; பூரண வயதுடையவனுயின், இக்காலத்தில் அவ்வாறிருப்பது துர்லபம். அப்படியே யிருப்பினும் பாதி உறக்கத்திற் கழிகிறது. மற்றப் பாதியில் அறியாத்தன்மையினை யுடைய இளம்பிராயத்திலும், யாதொரு காரியமும் செய்யக் கூடாமையாகிய வயோதிகத்திலும், பெரும்பாகம் பாழாகின்றது. எஞ்சி நின்றதிலும் அநேகம் பிணி, பசி, துன்பங்களால் அவலமாகின்றன.

வேதநூற் பிராயம்நூறு மனிதர்தாம் புகுவரேனும்
பாதியு முறங்கிப்போகும் நின்றதிற் பதினையாண்டு
பேதைபா லகனதாகும் பிணிபசிமூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே.

(திருமாலை)

சென்றநா ளெல்லாஞ் சிறுவிரல்வைத் தெண்ணலாம்
நின்றநாள் யார்க்கு முணர்வரி தென்றொருவன்
நன்மை புரியாது நாளுலப்ப விட்டிருக்கும்
புன்மை பெரிது புறம்.

என்னும், அறநெறிச்சாரச் செய்யுளின்படி, நமது ஆயுட் காலமானது விநாடிகளாய், நிமிஷங்களாய், மணிகளாய், நாட்களாய், மாதங்களாய், வருடங்களாய் ஓடிக்கொண்டே யிருக்கின்றது. கடந்துபோன ஒரு விநாடி காலத்தை எவ்வளவு பாடுபட்டாலும் மீட்டும் அடைய முடியுமோ?

ஆகையால்

முற்றமூத்து கோல்துணையா முன்னடிநோக்கி வளைந்து
இற்றகால்போல் தள்ளிமெல்ல விருந்தங் கிளையாமுன்
பெற்றதாய்போல் வந்தபேய்ச்சி பெருமுலை யூடுயிரை
வற்றவாங்கி யுண்டவாயான் வதரி வணங்குதுமே.

(பெரியதிருமொழி)

என்னும், திருவாக்கின்படி, வயோதிகத்தால் வருந்தாமுன்னமே, செய்ய வேண்டியவைகளைச் செய்து முடித்துக்கொள்ளவேண்டும்.

முக்காலுக் கேகாமுன் முன்னறையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றேது (தனிப்பாடல்)

என்றார் பிறரும்.

இதுகாறுங் கூறியவாற்றாற் பிறவி தீதென்றும், அதைக் கடக்க முயற்சிப்பதே அறிவுடையோர் செய்கையென்றும், அவ்வாறு முயற்சிப்பதற்கு மானுடதேகம் இன்றியமையாததென்றும் அஃதும் கிடைத்ததற் கருமையானதென்றும், கிடைத்தாலும் நமக்குக் கிட்டுங்காலம் சொற்பமே யென்றும், பெற்றனவாம்.

ஆதலால், "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்றபடி பெறுதற்கரியதாகிய இப்பிறவியைப் பெற்றுள்ள இப்பொழுதே, நாளை பின்னை யென்று வாணாளை வீணாளாக்காது, பிறவி யென்னும் பெருங்கடலைக் கடந்து, என்று மழியா நிலையினையுடைய மோக்ஷ வீடடைந்து இன்புறுதற்கு ஒவ்வொருவரும் முயலல்வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் றிருவருள் சுரப்பாராக. சுபம். சுபம். சுபம்.

---

## வீண் செலவு.

"இளமையிற் கல்" என்று ஔவையார் அருளியிருப்பதுபோல், எத்தகைய தொழில் கற்பதற்கும் இளமையே தக்க பருவமாகும். ஆகையால் குழந்தைகளுக்கு சிறு பிராயத்திலிருந்தே நல்ல பழக்கங்களை நாம் போதிக்கவேண்டும். ஏனெனில், பழக்கமே வழக்கமா மன்றோ? ஆகவே நாம் இனி எழுதப் புகும் "செட்டு" என்னும் நற்குணமானது, தங்கள் மாணவர்களுடைய மனதில் நன்கு குடிகொள்ளும்படி முயற்சிசெய்தல் உபாத்தியாயர்களின் கடமையாகும்.

அவசியமில்லாத வழிகளில் மிதமிஞ்சிச் செலவுசெய்வதுதான் வீண்செலவு. சில இளைஞர்கள் தங்கள் பெற்றோருடைய வரும்படி அற்பமாயிருப்பினும், தனிகருடைய குமாரர்களைப்போல் தாங்களும் நடக்கமுயன்று வீண்செலவு செய்கிறார்கள். "புலியைப்பார்த்துப் பூனையும் சூடுபோட்டுக் கொண்டதாம்" என்பதுபோல், பிற்காலத்தில் இவர்கள் துன்பமடைகிறார்களே யொழிய வேறு சுகம் ஒன்றும் அடைந்தார்களில்லை. இது பெரிய அவிவேகமன்றோ? டம்பத்துக்காகச் செலவுசெய்யும் குணமுடையோரின் குடும்பங்கள் எத்தனை முழுகிப் போயிருக்கின்றன!

சூதாட்டத்தைப்போல் வீண்செலவு செய்தல் நாளுக்கு நாள் அதிகரிக்குமேயொழியச் சிறிதேனும் குன்றாது. வீண்செலவு செய்பவன் தன் வருமானத்தைச் சற்றும் கவனிப்பதே யில்லை. அவனுடைய குறைச்சல்களும் தினந்தோறும் விருத்தியடைகின்றன. முன்னோர்கள் சேகரித்துவைத்திருந்த பணம் இருப்பின் அதை அவன் கூடியசீக்கிரத்தில், தனக்குத் தேவையாயிருப்பவற்றை

அடையச் செலவுசெய்து விடுகிறார்கள். அல்லது அவன் மாதவருமானமுள்ள வனுயிருப்பின் சீக்கிரத்தில் கடனாளியாகிறான். அவன் ஒருவேளை க்ருஹஸ்தனு யிருந்தால் அவன் குடும்பம்முழுவதும் கஷ்டப்படவேண்டி யிருக்கின்றது. ஒரு தடவை அவன் கடன் வாங்கினுல், அக்கடனுனது, சாயங்கால நிழலைப்போல் ஒவ்வொரு நிமிஷமும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஒருவனுக்குக் கடன் அதிகமாய்விட்டால், மனேதிடத்தை யிழந்து, அவமானத்தையும் அபகீர்த்தியை யும் அவன் அடைகிறான். இதனுலன்றே "கடன் பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினுன் இலங்கைவேந்தன்" என்ற வாக்கும் உண்டாயிற்று.

"ஆனமுதலில் அதிகம் செலவானுல்
மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனுய் ஏழ்பிறப்பும் தீயனுய்
நல்லார்க்கும் பொல்லனு நாடு."

என்றபடி தமக்குள்ள வருமானத்துக்கு அதிகமாய்ச் செலவு செய்பவர்கள் மான மழிந்து மதி கெட்டு, தூர தேசத்துக்கு ஓடிப்போனபோதிலும் அவ்விடத் திலும் எல்லார்க்கும் திருடனுகி, ஏழு பிறவிகளிலும் பாவிகளாய்ப் பிறந்து, நல்லவர்களுக்குங்கூடப் பொல்லாதவர்களாவார்கள்.

தங்களுடைய வரும்படிக்குத் தக்கபடி செலவு செய்துகொண்டு, கூடுமான வரையில், கொஞ்சம் மீதியாகும்படியான வழியையே நாம் தேடவேண்டும். "வளவனுயினும் அளவறிந்தழித்துண்" என்ற நீதிவாக்கியத்தின்படி, ஒருவன் அளவற்றபொருள் வரும்படியுள்ள வேந்தனுயிருந்தாலும் தன் வருமானத்துக்குத் தக்கபடி செலவு செய்யவேண்டும்.

சில பெண்கள் தங்கள் கணவருடைய வரும்படி குறைவாயிருந்தாலும் அதைச் செட்டாகச் செலவுசெய்து, கொஞ்சம் மீதி வைத்து, புருஷருக்கு வரும் படி குறைவாகுங் காலத்தில், அதைக்கொண்டு தங்கள் வீட்டுச் செலவுகளை செய்துகொள்ளுகிறார்கள். இதுதான் நல்ல புத்திசாலித்தனம்.

---

## இதுதானு சீர்திருத்தம்?

நம்நாட்டிற் சீர்திருத்தம் சீர்திருத்தமெனப் பறைமுழக்கொப்பத் திசைக டோறு மொலித்தல் உண்மையோவென, நன்மனச்சாட்சியோடாராயப்புகின் நகைவிளையாமற்போகாது. பண்டைக்காலந்தொட் டெம்மனேர்களா லனுசரிக் கப்பட்டுவந்ததும், அழகும் குணமும் இனிமையும் வாய்ந்ததும் இராசாதி இரா சர்களாலும், வித்வசிரோமணிகளாலும் செல்வப்பிள்ளையாய் வளர்க்கப்பட்டுவந்த தும், எவரும் ஒரு குறையுஞ் சொல்லக்கூடாது நிந்தனையின்றி வந்தனையோடு பரிபாலிக்கப்பட்டுவந்தது மாய நந்தமிழ்ப்பாஷையைப் புறக்கணித்து, அழகு குன்றச்செய்ததாகிய சீர்திருத்தத்தையே முதலாவதாகக் கவனித்தோம். நமது சொந்தப்பாஷையாகிய இந்தத் தமிழ்ப்பாஷையிலுள்ள நூல்களையும், அவற்றி னருமைகளையுமறிந்து மேலைத்தேசத்தாரே சின்னூற்களைத் தம்பாஷையில்

திருப்பி நித்தமுமெடுத்து முத்திசெய்து போற்றுகின்றனரல்லவா ? அன்றியுங் கற்று மிக்க பண்டிதராலும் புகழ்ந்தொழியா நம்பாஷையை அறிவிலியாகிய யான், இச்சிறுவியாஸத்தில் வர்ணிக்கத் துணிதல் " வானகத்தெழும் வான்கதிரோன்புடை—மீனிமைப்ப விரும்பியபோலுமால் " என்னே ? இத்துணை அருமைவாய்ந்த நம்பாஷையின்வாயில் மண்ணைவாரியிறைத்து, கற்புமிக்க உத்தமபத்தினியைக் கவனியாது தாசிவீடேகித் தவிக்குங் காமுகரொப்ப, அன்னிய பாஷையையே அன்போடாதரித்தல் சீர்திருத்தமாமோ ! தமிழராய்ப்பிறந்து " நாம் தமிழர் " என்று கூறுமனேகர் தம்பிள்ளைகளுக்குத் தமிழ்போதியவாறு கற்பியாது, ஆங்கிலங்கற்க விட்டுவிடுகின்றனர். அவர்கள்:—" பப்ளிக் பிளேசுகளிலே, நியூசென்ஸ் செய்கிறவர்களை ஆக்டின்படி பனிஷ் பண்ணப்படும் " என்றும் " சிக்காயிருந்து டாக்டரைக் கூட்டிவரப்போனதினால் மீட்டிங்குக்கு வரவும் இல்லாமற்போய்விட்டது " என்றும் கஞ்சிக்குப் பயறிட்ட மேரை பேசிப் பயிலக் கண்டுங் கொன்னே கிடந்து, இருபாஷையையு மவலட்சணப் படுத்துகின்றனரே. ஒருசபையில் ஆங்கிலேயர் ஒருவர் ஓர் தமிழ்ப்பிரபுவை நோக்கித் தமிழிற் பேசும்படி கேட்டார். அவரோ தனக்குத் தமிழிற்பேச அதிகத் தேர்ச்சியில்லையென்றும், இங்கிலீஷிலானுற் பேசுவேனென்றுஞ் சொன்னார். அப்படியே அவரை இங்கிலீஷிற் பேசும்படி உத்தரவாகி அவர் பேசும்போது, மேற்படி துரைமகன் எழுந்து, அவர் ஆங்கிலேயபாஷையிற் பேசுவதைத் தான் தமிழில் மொழிபெயர்த்தார். தமிழனுக்கே தமிழ்பேசத்தெரியாமல் பிறபாஷையிற்பேச அதை ஆங்கிலேயர் தமிழ்ப்படுத்தினரென்றால், அஃதென்ன வெட்கக்கேடு ? இன்னுமொருவர் என்னிடம் பேசும்போது " இதைத்தமிழில் விவரிக்க நன்றாய்த் தெரியவில்லை " என்றார். இவை யெல்லாம், நந்தமிழைப் போதியவாறு கல்லாமையால் வந்த குறைகளேயாம். இதனால் நாம் ஆங்கிலேய பாஷையைக் கற்கவேண்டாமென்று கூற வரவில்லை. அதையு மவசியங் கற்கவேண்டியதே.

மேலைத் தேசத்தாரிடம் நாம் கற்கவேண்டியதும், கண்டு பழகவேண்டியதுமான அநேக காரியங்களிருக்க, அவற்றை நீக்கி நமக்கு முற்றும் விரோதமானதும், இழிவை யுண்டாக்கக்கூடியதும், சற்றும் பிரயோசனப்படக்கூடாததுமானவைகளைப் பற்றிக்கொண்டு வான்கோழி மயிற் கூத்தாடியபான்மையாய் நடத்தல் சீர்திருத்த மென்னப்படுமா ? அவர்களின் நடையுடைபாவனை நமக்கு ஒரு சிறிதும் பொருந்துமா ? சீதோஷ்ண நிலைக்கேற்ப ஒவ்வோர் தேயத்தாரின் உடுப்பு, உணவு முதலியன மாறுபட்டிருக்கு மென்பது சகஜமே. அப்படியிருக்க நம்மவர் காற்சட்டை, தொப்பி, டை, காலர், சப்பாத்து முதலியன அணிந்து கொண்டு கிறீச், கிறீச் எனப் பாதரட்சைச் சத்தம் பர்லாங்குதூரம் கேட்க நடக்கின்றனரே. இத்தகைய மாந்தர் வீட்டைப் புகுந்துபார்ப்பின் முழுவதும் மேலைத்தேய மேறையே. நம்முன்னோர் வழங்கிய உணவுப் பொருட்கள் விடு பட்டு ரொட்டி, ஜேம், விறண்டி, இறைச்சி முதலியன பூராவாய்ப் பாவிக்கப் படுகின்றன. ஐயோ ! இவ்வுணவு உஷ்ணதேய மக்களாகிய நமக்கு உதவுமா ?

இதைக் கவனிக்கின்றாரில்லையே. தமிழ் நாட்டுப் போசனம் நமது உடம்புக்கு எத்துணை நலமானது. மல்லி, மிளகு, மஞ்சள், வெந்தயம், சீரகம், கடுகு முதலிய மருந்துச் சரக்குகளே கறிவகைகளில் சேர்க்கப்படுவது சாத்திரத்தை யனுசரித் தல்லவோ! மேலைநாட்டார் பார்வைக்கே இது அருவருப்பாய்த் தோன்றுதா? நம்மை இப்படி நடக்கும்படி அவர்கள் சொல்லுகிறார்களா? ஆங்கிலேயர் ஒருவர் நம்மைப்போல் வேட்டி சால்வை யணிந்து சபைகளில் தோன்றினால் அவரைப் பற்றி நாம் என்ன நினைப்போம். அப்படியே அவர்களும் நம்மைக் கேடாய் நினைப்பதுடன் நமது தமிழ் ஆசாரவழக்கங்களைப்பற்றியுங் கௌரவக்குறைவாய் எண்ணிக்கொள்வார்க ளல்லவா? நமது பூர்வீகமுறைகளில் தவறுகண்டபின் தான் வேறோர்வகையைப் பின்பற்றவேண்டும். நம் நாடு ஆதியி லடைந்திருந்த கௌரதையைத் தற்போதுகுறைத்தல் நீதியா? வண்டலைப் பற்றிக்கொண்டு சாரத்தை ஒழுக விடும் பன்னாடைபோன்று, ஐரோப்பியமுறைகளைக் கண்மூடித் தனமாய்ப் பின்பற்றும் நம்மவர் விஷயத்திற் பெரிதும் பரிதபிக்கவேண்டி யதே.

அந்தோ! இன்னோர் சீர்திருத்தம் நமதுநாட்டிற் பரவக்கண்டோம். பெண் பாலாரும் அதேமாதிரிச் சுத்துடுப்பு, பாவாடை, தாவணி முதலியன உடுக்கத் தொடங்கி, இலட்சுமிக்கொப்பான தமிழ் உடுப்பை இகழ்ந்து, சாயப் புடவை களைவாங்கிச் சன்னல் பின்னலாய்க் கிழித்துத் தைத் துடுத்துத் தமிழ்முறை மைக்குத் தாழ்ச்சி யுண்டாக்குகின்றனர். இதுமட்டுமா? போதாதென்று ஆங்கி லேயரைப்போன்று நடக்கத்தொடங்கி நங்கன்னிப் பெண்களுக்குரிய நால்வித லட்சணத்தையுங் கவனியாது, சபைகளிற்போய்க் கீதம்பாடல், கின்னரமீட்டி நடனஞ்செய்தல் முதலியன செய்து அவலட்சண மாக்குகின்றனர். நம் முன் னோர் ஒவ்வொரு பெண்ணும் விவாகத்துக் குடன்படுமட்டும், வீட்டைவிட் டகலாதுவைத்துக் காக்கப்படுமுறையை ஏதுக்கு விதித்தார்களென் றுணர்கின்றா ரில்லை. இவர்களிடம் இதற்கு நியாயங்கேட்டால் "புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவல" என்னுந் தந்திரவிதியை மந்திரம்போல் மன்னம் பண்ணிச் சொல்லி விடுகின்றனர். இவர்கள் முட்டாள்தனத்துக்குச் சுவரில் முட்டிக் கொண்டாலுந் தீராதே. நம்பாவையர்க்குக் கல்வி அவசியமேயன்றி இவை யெல்லா மொரு சிறிதும் பொருந்தாவாம்.

மேற்போந்த சீர்திருத்தமே நமது தேசத்தில் வேரூன்றத் தொடங்குகிறது. இலட்சக்கணக்கான தமிழர்வசிக்கும் நமது சுதந்தர பூமியில், இதுபோன்ற குறைந்த சந்தாவும் நிறைந்த அறிவுமுள்ள சஞ்சிகைகள் பராமுகமாய் விடப் பட்டிருத்தலையுந் தற்கால சீர்திருத்த மென்போமா? காருண்யம்பொருந்திய ஆங்கில துரைத்தனத்தார் நம் அதிஷ்டவசத்தால் நம்மை ஆளத் தொடங்கியபின், உண்மையான சீர்திருத்தம் தலைக்காட்டாமலு மிருக்கவில்லை. ஆதி அன்னை யாகிய தமிழ்மாது தன்னை அன்புடன் ஆதரிக்கும் மக்களைப்பெறாமலும், தன் னகம் வைத்திராமலும் இருக்கவில்லை. என்றாலும் இன்னும் முன்னேற்ற மடையும் நோக்கத்துடனேயே இவ்விஷயத்தைப் பற்றிக் கனவான்கள் பலர்

முன்னமே எழுதியிருப்பினும் பின்னும் மொருமுறை கூறல் மிகையாகாதென் றே நாமும் சகோதரரை இவ்வளவாய்க் கண்டிக்கத் துணிந்தோம்.

ஆகையால் கனவான்களே ? தமிழ்மாது பெற்ற தனயரே! இதை நீங்கள் நன்குணர்ந்து "நாம் தமிழர்" என்ற எண்ணத்தை மனதிற் பதிந்து, தமிழ் முறைகளைக் கைவிடாது நடத்துவீர்களௌன நம்புகிறோம்.—ஆங்கிலேய அரசாங்கத்தின் கீழ் நாமிருப்பதாலும், அவர்களோடு பழகி, அவர்களிடம் உத்தியோகம் முதலியன நடத்தவேண்டியவர்களா யிருப்பதினாலும் அவர்கள் பாஷையைக் கற்பது அவசியமே. ஆங்கிலபாஷைச் சொற்கள் சில நம்பாஷையுடன் கலந்து திசைச் சொற்களாய் வழங்கவேண்டியதும் அவசியமே. எனினும் நாம் கவனிக்கவேண்டியன சில உண்டு. நம்பாலர் கூடிய அளவு தமிழையே பேசவும் அதை நன்றாய்க் கற்கவும் வேண்டும். நமது குழந்தைகள், அவசியமான தருணங்களில் மட்டும் இங்கிலீஷ்பேசவும், இங்கிலீஷ் உடை உடுக்கவும், மற்றத் தருணங்களிலெல்லாம் (நம்மவர்களோடு சகவாசம் செய்யும் காலங்கள் முதலியன) தமிழ்ப்பாஷையையே பேசவும், தமிழ் உடுப்பையே பாவிக்கவும் நந்தமிழுக்கு ஊன்றுகோலும் உற்றதுணையுமாக இருக்கும் வண்ணம் அவர்களைப் பயில்விக்க வேண்டும். அன்றியுமவர்கள், சங்கரபாஷையைப் பேசாமல், தமிழ்ப் பேசும் நேரங்களில் சுத்ததமிழும், இங்கிலீஷ் பேசுந் தருணங்களில் சுத்த இங்கிலீஷும் பேசும்படி சிரத்தையெடுக்கவும்வேண்டும். ஷாப்புகளில் விற்கும் விலை யுயர்ந்த சவுக்காரம் முதலியன வாங்கிக்கொடுத்து அவர்கள் அதிலேயே பழகிக்கொள்ளாமல், அதிலும் பன்மடங்கு சுகந்தரும் சீக்காய் சந்த பல்பொடி முதலியன தேய்த்து ஸ்நானஞ்செய்யும்படி நம்பாலரைப் பழக்கவேண்டும். இப்படியே ஒவ்வொரு விஷயத்திலும் நமது பிள்ளைகளைச் சிரத்தையுடன் தமிழாசாரம் தங்கும்படி நடத்துவோமாயின், நமது தேசம் பிறர்பார்வைக்குக் கண்ணியமுடையதாய்க் காணப்படுவதோடு நாம் மெய்யான சீர்திருத்தமும் அடைந்து முன்னுக்கு வருவோமென்பதிற் றடையில்லை.

---

## தமிழ்த் தெய்வவணக்கம்.

**வெண்பா.**

சீராகச் செப்புவேனானும் செந்தமிழை
யாராய்ந்து தெளிந்த வறிவினராற்—நேராக
குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல்
முற்று முணர்ந்தோர் கடன்.

சீரோங்குஞ் சென்னையிற்றோன்றிய செந்தமிழ் ஆனந்தபோதினிச் செல்வக்குழவியை யாதரித்துவரும் சந்தாதாரர்களுக்கும் மற்றுமுள்ள கனதனவான்களுக்கும் 2132, நெ. சந்தாதாரனாகிய நான் சொல்லத்துணிந்த தென்னையோவெனின்:—

நமது செல்வத்திற்கு அமைந்துள்ள பெயருக்குத் தகுதியாகத் தமிழ்ப் பாஷா விஷயமாகச் சில பல சொல்ல விரும்புகின்றேன்.

விரும்புகின்ற நான் சுவைமொழி புணர்த்திப்பேசுஞ் சொன்னயப்பன்மை யனல்லன். ஆகவே என்னிற்பிழைகளோ பெருமலைபோலத் தோன்றும். நீவிரனைவரும் கல்விகேள்விகளையும், புத்திநுட்பத்தையும் உடையவர்களென்பதற்கு நமது செல்வமாகிய ஆனந்தபோதினியே யன்றி வேறு சாட்சி வேண்டுவதில்லை. ஆதலின் குற்றங்களைக் குறிக்காது குணத்தையே மேற்கொள்ளுந் தகைமையையுடைய உங்களுக்கு யானும் ஒரு அறிஞனாய்ப் பின்வருமாறு சொல்லத்துணிந்தேன்.

நீராருங்கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும்வதனமெனத் திகழ்பாரதகண்டமிதிற்
றக்கசிறுபிறைநுதலுந் தரித்தநறுந்திலகமுமே
தெக்கணமுமதிற்சிறந்த திராவிடநற்றிருநாடும்
அத்திலகவாசனைபோ லனைத்துலகுமின்பமுற
எத்திசையும்புகழ்மணக்க இருந்தபெருந்தமிழணங்கே.

கடலாகிய ஆடையையுடுத்தவள் பூமியாகிய பெண்; இப்பெண்ணிற்கு முகமாயிருப்பது பரதகண்டம்; அம்முகத்தின் அவயவமாகிய நெற்றி தக்ஷிணம்; அந்த நெற்றியின்கண் விளங்கும் கஸ்தூரித்திலகம் திராவிடநாடு; அந்தத் திலகத்தின் வாசனைபோல் வீசுவது புகழ்; அந்தப் புகழையுடைய தெய்வம் தமிழே.

பாஷையென்பது வடமொழியிற் பெண்பாற் சொல்லாதலானும் கல்விப் பொருட்கு அதிதேவதையாகிய சரசுவதி பெண்பாலாதலாலும், தமிழ்த் தெய்வத்தை "தமிழணங்கே" என்றார்.

புண்ணியபூமியாகிய பரதகண்டத்தில் நாபி மகாராஜனது பௌத்திரனும், இருஷப மகாராஜனது புத்திரனுமான பரத மகாராஜனால் ஆதியில் ஆளப்பட்ட இடம் பரதகண்டம். இப்பரதகண்டத்தில் ஆதிகாலந்தொட்டுள்ள பாஷை ஆரியமும் தமிழுமேயாம்.

ஆதிகாலத்து ஆரியரோடு ஆரியம் இமயமலைக் கப்பாலிருந்து வந்ததென்றும், ஆரியர் கங்காதீரதேசங்களை வென்று கைப்பற்றியபோது அங்கே வசித்தவர்கள் தமிழர் என்றும், ஆரியரை ஜெயிக்கமுடியாமையானும், அவர்க்குக் கீழ்ப்பட்டிருக்க மனம் ஒவ்வாமையானும், சுயேச்சாபங்கம் உறுவதினும் தமது நாட்டைக்கைவிட்டுப் பிறவிடஞ்சேர்ந்து சஞ்சரித்தலே தமக்குச் சிறப்பென்று கருதித் தமிழர் தென்றிசை சென்று, தமக்குள்ளே அங்கு சேரசோழபாண்டிய ராச்சியங்களை ஏற்படுத்தினார்களென்றும் துணிவார் பலருளர். இவர் துணிபிற்குச் சார்பான அயற்சாட்சிகளும் பல உள. இஃது உண்மையாயின் இந்தியாவிற்கு ஆதிபாஷை தமிழென்றே முடியும்.

" மூன்றுழந்தபதிற்றெழுந்தான் முழுவதுமாயுனக்கினிதாய்த்
தோன்றிடுமத்தமிழ்ப் பாடைத்துதிகொண்டுமகிழ்ந்தருளி
ஆன்றவரமெல்லார்க்கு மிவ்வரைப்பினளித்தருளாய்
ஏன்றெடுத்தமொழிகல்வி எவற்றினுக்குமிறையோனே " என்றும்,

" கூம்பியகைத்தலமுடைய குறுமுனிக்குப்பின்னுஞனர்
தாம்பரிந்துதமிழ்விளக்கு மாசிரியத்தலைமையொடு
மேம்படுதென்றிசைக்கிறைமை நல்கிவேட்டனபிறவும்
ஆம்பரிசினளித்தருளி அவ்விலிங்கத்திடைக்கரந்தார்."

என்பதனால் தமிழும் தமிழின் இலக்கணம் வந்தவாறும் வெளிப்பட்டது.

எங்ஙனமெனின்:—தொன்றுகலந்த எவ்வமற இன்று இலக்கணவரம்பி ஞற் புதிதுபடுமாறு யான் உரைக்க அருள் என்னும் பொருளை யுள்ளிட்டு " எவ்வமறப்புதிதாக யான் வகுப்பநல்கி " என்றும் ஓதுதலான், பின் இதன் கண் ஐயம் நீங்கித் துணிபெய்த எல்லாமொழிகட்கும் எல்லாச் சமயவித்தை கட்கும் மகேசுரனே முதல்வன் என்னும் பொருளை யுள்ளிட்டு " ஏன்றெடுத்த மொழிகல்வி யெவற்றினுக்கு மிறையோனே " என்றும், அருளினர். தமிழ் மொழிதன்கட் கலந்த வழுவினீங்கிச் செம்மையுறுமாறு இலக்கண விளக்கஞ் செய்யும் ஆசிரியத் தன்மையே சிவபிரான் அகத்தியர்க்கு அருளிச்செய்தார் என் பது ஐயமறவுறிக.

" தமிழ்ச்சொல் வடசொல்லெனு மிவ்விரண்டும் உணர்த்துமவனை உணரலு மாமே " என்னும் திருமந்திரப்பிரமாணத்தாலும், திருமறைக்காட்டுத் திருத் தாண்டகம் ஐந்தாவதில்:—

" ஆரியன்கண்டாய் தமிழன்கண்டாய் " என்பதினாலும்:—

மேற்படி ஒன்பதில். " முத்தமிழு நான்மறையு மானான்கண்டாய் " என் பதினாலும்,

திருவாவடுதுறை திருத்தாண்டகம் பத்தாவதில்:—

" செந்தமிழோடாரியனைச் சீரியானை " என்பதினாலும்,

திருச்சிவபுரம் திருத்தாண்டகம் ஒன்பதில்:—

" வடமொழியுந் தென்றமிழு மறைகணான்கும்
ஆனவன்காண் " எனவும்,

திருக்கடம்பந்துறை திருக்குறுந்தொகை மூன்றில்

" ஆரியந்தமிழோடிசை யானவன் " என்பதினாலும்,

தமிழ் ஆரியம்போலச் சிருஷ்டிதொடங்கி நிலைபெற்றுள்ள தொன்மை யுடையதொரு தெய்வமொழி என்பதற்குச் சற்றேனுஞ் சந்தேகமில்லை:—

இனித்தமிழென்ற சொல்லன்னவென்பதை என்சிற்றறிவிற் கெட்டியவாறு விளக்குவேன்:—

" தமிழ் " என்னும் பதத்திற்கு " இனிமை " என்று பொருள்படுகின் றது.

தமிழ் என்னுந் தர்மவாசகம் இனிமைப்பொருளுணர்த்துதலை, சிந்தாமணி யில்—" தமிழ் தழீஇய சாயலவர் " என்பதற்கு, நச்சினார்க்கினியர் இனிமை பொருந்திய சாயலையுடையவர் என்று பொருளுரைத்திருக்கின்றார்.

"என்றனை நீ அன்றளம்யாம் " என்றபடி தமிழ்என்னும்சொல் இயற்கை யுண்மைச் சிறப்பியன் மொழியாக வழங்கிநிற்கின்றது.

" மகத்துவந்தங்கிய அகத்தியனாரும் அவரது மாணாக்கருட் டலையாய தொல்காப்பியனாரும், இவரையடுத்த மற்றையரும் இலக்கண ஆராய்ச்சி செய்யு முன்னரே தமிழ் என்பது இயற்கை யுண்மைச் சிறப்பியன் மொழியாய், தொன்றுதொட்டேயுள்ள தெய்வமொழி என்பது வெள்ளிடைமலைபோலத் தெள்ளிதிற் கிடைக்கின்றது. தொன்மையும் இனிமையும் வாய்ந்ததாலன்றோ குமரகுருபரசுவாமிகள்:—

"தமிழொடுபிறந்து பழமதுரையில் வளர்ந்தகிளி சப்பாணி கொட்டியருளே " என்றார்.

" மதுரித்தமொழியிட்டு மதுரத்தை விலையிட்ட
மதுரைக் கயற்கண்ணியே " என்பது மறிக.

கல்லாடத்தில்:—" மீனுங்கொடியும் விரிதிணையைந்தும், தேனுறைதமிழும் திருவுறைகூடலும், மணத்தலின் மதிக்குல மன்னவனாகியும் " எனவும்,

இராமாயணம் அயோத்தியாகாண்டம் சித்திரகூடப்படலம் 28-வது செய்யுளில்

" குழுவுநுண்டுளைவேயினுங் குறிநரம்பெறிவுற்
றெழிவுதண்டமிழ் யாழினுமினிய சொற்கிளியே " எனவும்,

இலக்கியங்கள் பலவிதத்தும் தமிழ்என்பது இனிமை என்னும் பொருளைக் கொடுத்து இயங்காநிற்கும்.

இயற்கை யுண்மைச் சிறப்பியன் மொழியாக நிற்றலினாற்றான் திரண தூமாக்கினியார் தாம் இயற்றிய தொல்காப்பியத்து " தமிழெனகிளவியு மத னோரற்றே " எனவும், " செந்தமிழியற்கை சிவணியநிலத்தொடு " என்றும் சூத்திரஞ்செய்தார்.

ஆசிரிய வசனத்தை மரபாகப்போற்றும் பின்னூலாரும் " தமிழவ்வுறவும் பெறும் " எனவும்,

" செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிருநிலத்திலும் ஒன்பதிற்றிரண்டினிற் றமிழ் மொழிநிலத்தினும் " என்றும் சூத்திரிப்பாராயினர்.

இன்றளவுமுள்ள தமிழை மேனோக்காகச் சற்று கவனிப்போம்.

நான்வசிப்பது நாட்டிலானதால் முதல்முதல் ஏருழுபதின் சொற்களை நோக்குவோம்.

உழவு, கலப்பை, கார், கயிறு, குண்டை, நுகம், சால், வயல்; வாய்க்கால், ஏரி, மடு, ஏற்றம், முதலிய ஏருழுபதெல்லாம் தமிழ்மொழிகளே.

தமிழர்கள் வசிக்கும் வீடுகளின் கூறுகளாகிய தலைக்கடை, புழைக்கடை, கூரை, வாரை, கூடம், மாடம், முதல் மற்றையவுந்தமிழே.

தலை, கால், கண், காது, மூக்கு, நாக்கு முதலிய உடற்கூற்று மொழிகள் தமிழே.

ஆரூர், பேரூர், சித்தூர், புத்தூர், ஆற்றூர், வேலூர், முதலிய ஊர்கள் பலவுந்தமிழ் மொழிகளே.

ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழம், வெள்ளி சனி ஆகிய கிழமைப் பெயர்களும் தமிழ்ப் பெயரே.

தொண்ணூற் றொன்பதினாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன் பது வரையில் எண்ணப்பட்ட எண்களும் தமிழே.

ஆழாக்கு, உழக்கு, நாழி, குறுணி, பதக்கு, முதலிய முகத்தலளவைப் பெயரும்,

சாண், முழம், அடி ஆகிய நீட்டலளவைப் பெயரும் தமிழ்ப் பெயர்களே.

மணங்கு, வீசை, பலம் என்னும் எடுத்தலளவைப் பெயர்களும், கீழ்வாய், மேல்வாய் என்னுங் இலக்கங்களின் குறியீடுகளும் ஆகிய எல்லாந் தமிழே.

தமிழ் மக்கள் உண்ணும் சோறும், சாறும், காயும், கறியும், பாலும் பழமும், நெய்யுந், தயிரும், உப்பு முதலொன்பதும், பருப்பு முதல் பத்தும் தமிழ்ச் சுவையே.

தமிழர்களுடைய துணியும் அணியும் தமிழே.

தமிழர்களுடைய வீடும் நாடும் புகுந்து பார்க்கின் எங்குந் தமிழே.

தமிழ் மக்களால் வணங்கப்படுந் தெய்வமும் தமிழ் மயமே.

நம்மைப் பெற்றதும் தமிழ்; வளர்த்ததுந் தமிழ்; நம்மைத் தாலாட்டித் தூங்கவைத்ததுந் தமிழ்; நம்மழலைச் சொல்லால் நம் பிதா மாதாக்களை மகிழ் வித்ததுந் தமிழ்; நாம் குழந்தைப் பருவத்தில் முந்தி உச்சரித்ததும் தமிழ்; நம் தாய் தந்தையர் நமக்குப் பாலுடன் புகட்டினதுந் தமிழ்; நம் ஆசாரியர் நமக்கு ஆதியில் உபதேசித்ததுந் தமிழ்; நம்முன்னோர்களெல்லாம் ஆதிகாலத்துப் பேசி யதுந் தமிழ்; எழுதிவைத்த பாஷையும் தமிழே; நம்முடைய பந்து ஜனங்களும் இஷ்ட மித்திரர்களும் பேசுகிறதும் தமிழே; நம்நாட்டுப் பாஷையும் தமிழ்; வீட் டுப் பாஷையுந் தமிழ்; மறைமுதற் பொருளாம் கறைமிடற் றிறைவனைப் பா வைபால் தூது இரவிலே போக்கியதும் தமிழே; முதலையுண்ட மதலையைச் சிதலமின்றித் தருவித்ததுந் தமிழ்; மறைக்காடதனில் மறைக்கதவினைத் திறந்த திறவுகோல் எது ? அதுவும் தமிழே; நமது நாயன்மார்களும் ஆழ்வாராதிகளும் கைக்கொண்ட பாஷையும் தமிழே.

இப்படிப்பட்ட அருமையானது நமது தமிழ்ப்பாஷை.

ஒவ்வொரு ஜீவஜெந்துக்களுக்கும் தனித்தனி பாஷையுண்டு.

அந்தந்தப் பிராணிகளும் தன் தன் பாஷையை மறவாது உபயோகிப்பதை உற்றுநோக்கி யூகித்துணரலாம்.

ஐரோப்பியர்கள் தத்தமக்குரிய பாஷைகளை எவ்வளவோ கௌரவமாகப் போற்றி வருகின்றார்கள்.

அவர்களில் ஆங்கிலேயர்கள் கிரீக், லத்தீன், பிரஞ்சு, ஹீப்ரு, சமஸ்கிருத முதலிய பலபாஷைகளிலிருந்து பற்பல பதங்களைப் பொறுக்கி யெடுத்து இங்கி லீஷ்பாஷை யென்று பேரிட்டு அதைத் தங்களுடைய சொந்தப் பாஷையாகக் கொண்டு அப்பாஷையை விருத்திசெய்வதற்காக அவர்கள் படும்பாட்டை அறியா

தார் யாவர்? அவர்களுக்குத் தங்கள் பாஷையிலிருக்கும் அபிமானம் நம்மவர்களுக்கு நம்முடைய பாஷையில் இல்லாமற் போயிற்றே. இதெல்லாம் உற்றுப் பாராத தோஷமேயன்றி வேறில்லை.

அபிமானமற்றவர்கள் அம்மட்டில் நில்லாமல் தங்கள் தாய்ப் பாஷையையும் தமிழ் புலவர்களையும் அலட்சியஞ் செய்கிறார்கள். தமிழ் நூற்களையே பாராத இவர்கள், அவர்களையும் அவர்கள் நூற்களையும் எப்படிப் பழுதுசொல்லக்கூடும்? ஒரு கம்பருடைய வல்லமையைக் கனவிலுங் கண்டறியார்கள்.

கம்பர், கற்பனாசக்தியிலும், வருணனை செய்யும் வல்லமையிலும், மில்டனுக்குக் குறைந்தவரல்லர்; பிரபஞ்ச விலாசப் புலமையில் ஒருவாறு ஷேக்ஸ்பியரோடொத்தவர். ஐரோப்பியர்களுடைய ஆதி கவியான ஹோமருக்கு எவ்விதத்திலும் இளைப்பவரல்லர்.

புகழேந்தியோ, இங்கிலீஷில், கௌபர், கோல்ட்ஸ்மித் என்பவர்களைப்போலச் செம்பாகமான கவி.

கிரிஸ்துவ மதபோதகராகிய பிஷப்கால்ட்வெல் என்னும் அத்தியட்சகர், திராவிடபாஷா தர்மம் என்னும் நூலில் "தமிழ்ப்பாஷையானது தன்னிடங் கொண்ட சம்ஸ்கிருதப் பிரயோகம் முழுமையும் நீக்கிவிட்டபோதிலும் தனித்து நின்றியலும் ஆற்றலுடைத்தாய் வடமொழியின்றியே மேம்பாடடையத் தக்கது. தெலுங்கு, கன்னடம், 'மலையாளம் இவைகள் தன்னிடங்கொண்ட வடசொற்களைவிட்டு நிற்பது அசாத்தியம். தமிழ் ஒன்றுமாத்திரம் சமஸ்கிருத பாஷையுடன் சேராமல் சுயபாஷையாக நிற்கும்" என்று சிறப்பித்துக் கூறுகிறார். இவருக்கும் தமிழ்மக்களுக்கும் பற்றென்ன? இவரிதைச் சிறப்பித்துக் கூறுவானேன்? உள்ள உண்மையைக் கூறினார்.

தமிழானது சொற்பொருளழகில் கிரீக், லத்தீன், பாஷைகளுக்கு எவ்விதத்திலும் இளைக்காத பாஷையென்று சில ஐரோப்பியரும் எழுதியிருக்கிறதாகத் தெரியவருகிறது. ஒவ்வொருவர்க்கும் பாஷாபிமானம், சமயாபிமானம், தேசாபிமானம் ஆகிய மூன்றும் இன்றியமையாவாம்.

பாஷாபிமான ரத்தம் நம்முடைய சரீரத்து ஒவ்வொரு நரம்பிலும் ஓடிப் பரவப் பிரயத்தனப்படவேண்டும். பராமுகமாயிருக்கப்படாது. நம்முடைய தேகத்தில் பாஷாபிமான இரத்தம் நிரம்பியிருக்கிறதென்றும் நாம் பரதகண்டத்தின் உத்தமபுத்திரர்கள் என்பதையும் உலகறியக் காண்பித்தல்வேண்டும்.

உலகத்தில் பூர்வார்ஜிதம் சுயார்ஜிதம் என்று தனம் இருவகைப்படும்.

அவற்றுட் பூர்வார்ஜிதம் என்பது முன்னோர்கள் தம்மக்கட்காக வருந்திச் சம்பாதித்து எய்ப்பில்வைப்பாக வைத்ததிரவியம்.

இம்மூலதனம் வைக்கப்பட்டிருக்கும் இடம் எங்கே எனத்தேடி, அதனை எடுத்தனுபவிப்பது அம்மக்களின் கடமையல்லவா?

உலகத்தின் பொதுவான சுபாவம் பூர்வார்ஜித தனம் எவ்வளவு மிகுதியாயிருந்தாலும் அதனைப் பாதுகாப்பதும், பாதுகாப்பதோடு அவரவரும் தங்கள் தங்

களாலியன்றவரையி லுழைத்துச் சம்பாதித்து அதனோடு புதுவருவாயுங்கூட்டி அதனைப்பெருக்க முயல்வதும் அல்லவா ?

அங்ஙனமே பூர்வீகர்களால் தங்களுக்குச் சித்தித்திருப்பனவற்றை அந்தந் தத் தலைமுறையாரும் பாதுகாப்பதுடன் தங்கள் தங்களாற் கூடியவரையில் அபி விருத்தி செய்யவும் உரிமைபூண்டவர்களல்லவா ?

இங்ஙனமாகப் பூர்வார்ஜிதத்தை அலட்சியப்படுத்தி அது இருக்குமிடமே அறியாதவனும் உண்டா? தன் வயப்படுத்தியதைத் தானும் அனுபவியாது பிறர்க் கும் பயன்படுத்தாது, பாழே போகவிட்டு வழிவழிப் பழிபூண்டு வருந்துவானை உலகங்கூறுவது நீங்களறிந்ததே !

தான் சம்பாதிக்காவிடினும் முன்னோர்தேடிவைத்த வைப்பு இருக்குமிட மேனுந்தேடி, அதனைத் தன்வயப்படுத்திப் பாதுகாத்துப் பழிபாவத்துக்கஞ்சி அத னது மிதவட்டியாற்சீவிப்பவன், அறவே அழியவிட்டுப்பழிபூண்பவனினும் எத் தனையோமடங்கு மேலானவனல்லவா ?

மேற்கூறியபடி முன்னோர்தேடிவைத்த மூலதனம் இருக்குமிடம் அறிந்து அதனைத் தன்வசப்படுத்தித் தானும் தன்முயற்சியால் ஈட்டி, ஈட்டியதையுங் கூட் டிப்பெருக்கித் தானும் அனுபவித்துத் தன்னை அடுத்தார்க்குங்கொடுத்துப் பிறர்க் கும் பயன் படுத்துபவன் எவனோ அவனை உலகம் எத்துணைமேலோன்என்று வாழ்த்தாநிற்கும்.

" ஊருணி நீர் நிறைந்தற்றே யுலகாவாம் பேரறிவாளன் திரு " என்னும் பொய்யாமொழியார் வாக்குக்கு அவன் இலக்கல்லவா ?

நம் முன்னோர்கள் பன்னெடுங்காலம் பாடுபட்டுத் தம்மக்களாகிய நாமெல் லாம் ஈடேறும்வண்ணம் பரிந்து தேடி இயற்றிவைத்த அரியபெரிய நூல்க ளாகிய பூர்வார்ஜித பொக்கிஷத்துள் பல வேற்றுமதத்து மாற்றரசர் முதலானோ ரால் தீக்கிரையாயின.

தீக்கிரையாகிப் போனதுபோக நம்பாக்கியப் பயனாய் மிஞ்சிய பூர்வார்ஜித புத்தக பொக்கிஷங்களைக் கற்றுத் தேர்ந்த அநேக வித்வான்களும் புலவர்களும் அதிக இரகசியமாய்த் தம்மட்டிற் பொதிந்து வைக்கக் கிடந்தன. இச்சமயம் ம-ா-ா-ஸ்ரீ, N. முனிசாமி முதலியாரவர்கள் ஆங்காங்குள்ள வித்துவ சிரோன் மணிகளிடமிருந்து மேற்கண்ட இரகசியமாயுள்ள பொக்கிஷங்களைக் கைக் கொண்டு, தாமும் அனுபவித்துத் தம்மை அடுத்தார்க்கும், மற்றைய உலகர்க்கும், ஆனந்தபோதினிச் செல்வத்தின் மூலமாய்ப் பயன்படுத்தி, " பிறர்க்குதவி செய் யார், பெருஞ்செல்வம் வேறு—பிறர்க்குதவியாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி —செய்யாக் கருங்கடனீர் சென்று புயன் முகந்து—பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு " என்னுஞ் செய்யுட் கிலக்காயினர். ஆதலின் நண்பர்காள், ஒவ்வொரு வரும் நமது ஆனந்த போதினியை அலட்சியப்படுத்தாது, தருவித்து ஆதரித்து ஆனந்திக்கவும். ம-ா-ா-ஸ்ரீ, முதலியாரவர்களுக்கும், அவருக்கு விஷயமாகிய பொக்கிஷத்தை அளிக்கும் ஒவ்வொருவருக்கும், என்றும் தாழாத வாழ்வளிக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக. சுபம்.

# விவேக மாலா.

(254-ம் பக்கத்தொடர்ச்சி.)

நண்பா,

உனது நேசனுடைய குணங்கள் உன் குணங்களோடு முற்றிலும் ஒத்திருக்கவேண்டுமென்று எதிர்பாராதே. இது அருமை. மனிதன் ஒவ்வொருவனும் தனித்தனி பிரத்யேகமான அச்சில் வார்க்கப்பட்டவன். அவனை வார்த்ததும் அந்த அச்சைப் பிரமன் உடைத்தெறிந்து விடுகிறான். *உலகிலே ஒரே தாய் தந்தையர்கருக்குப் பிறந்த குழந்தைகளின் உருவ வேறுபாட்டைப்பார்! மனோ வாக்குக் காயங்கள் என்ற மூன்றிலும் அவர்களுக்குள் வித்தியாசம் காண்கிறோமன்றோ? ஒரே மரத்தில், ஒரே கிளையில், ஒரே கொம்பில், ஒரே காம்பிலுள்ள இலைகளும் தம் பரிமாணத்தில் வேறுபட் டிருக்கின்றனவே! வித்தியாசமே சிருஷ்டியின் இரகசியம்.

ஆயின் நீ உன்போன்ற குணங்கள் கொண்டோரையே துணையாகக்கொள்ள விரும்புவது தகுமா? இங்ஙனம் எண்ணுவதாலேயே சிநேக சுபாவம் உலகில் இத்தனை அருகியிருப்பது. பகைமை பெருகுவது.

ஒரு கவி இதைப்பற்றிப் பேசும்பொழுது பின்வருமாறு சொல்லிப் பரிதவிக்கிறார்.

(நொண்டிச்சிந்து.)

அஞ்சுதலைப் பாம்பென்பான்—அப்பன்
ஆறுதலை என்று மகன் சொல்லிவிட்டால்

நெஞ்சு பிரிந்து விடுவார்—பின்
நெடுநாள் இருவரும் பகைத் திருப்பார். (நெஞ்சு)

நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால். (நெஞ்சு)

இப்படி, சிறுசிறு அபிப்பிராய வேறுபாடு காரணமாக மனிதர் தமக்குள் பகைகொண்டு பிரிந்துவிடுதல் எத்தனை பரிதபிக்கத் தக்கது!

தோழரே,

உன் பண்ணைக்காரனைக் கல்வித் தோழனாகக் கருதாதே. கல்வித் தோழனைக் கடன் தரும் முதலாளியாகக் கொள்ளாதே. அவரவரை அவரவர் நிலையிற் கூடு. களத்திற்குத் தக்க துணைகொண்டு உன் காரியத்தைச் சாதித்துக்கொள்வாயாக. அன்றியும் தமிழரது நட்பின் இலக்கணத்தையெடுத்துச் சொல்கிறேன், கேள்.

இரண்டு பதங்கள் ஒன்றுடனொன்று சேரும்பொழுது, ஒரு பதத்தின் கடைசி எழுத்தும், மற்றொரு பதத்தின் முதலெழுத்துமே, தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்கள் கொண்டோ, கொள்ளாமலோ, சேர்ந்துவிடுகின்றன. ஆயினும் பதங்கள் சேர்ந்துவிட்டதாகச் சொல்கின்றனரே யன்றி எழுத்துக்கள் சேர்ந்ததாகச் சொல்லுவாரில்லை.

---

* அவரவர் வினைப்படி சிருஷ்டி, வினைப்பயன்கள் பேதப்பட்டிருப்பதால் சிருஷ்டியும் ஒன்றுக்கொன்று பேதப்பட்டே யிருக்கும், ஒருவருடைய உருவம் குணம்போல் இன்னொருவர்க்கு அமையாவென்பதே இதன் கருத்து.

இங்ஙனமே நீயும் உன்நேசனோடு எந்தக் காலத்தில் கலக்கிறாயோ அந்தக் காலத்திற்கேற்றபடி அவசியமானால் உனது அல்லது அவனது அபிப்பிராயத்தை மாற்றிக் கூட்டவழிபார். மற்றவற்றைக் கவனியாதே அதுவே நிலைக்கும்.

அங்ஙனமின்றிப் பதங்கள் இரண்டும் மாறிப் புதியதோர் பதமாக வேண்டு மென்று கருதாதே. அது தமிழ் சமூகத்தின் கோட்பாடாகாது. பட்டாங்குக்கும் விரோதமாம்.

ஆதலின், தலைவனே! அற்ப அபிப்பிராயபேதத்தைக் காரணமாகக்கொண்டு ஒருவரை வெறுக்காதே. உன் நேசரை முற்றிலும் உன்னோடு ஒத்தவரென்று எண்ணி உன்னையே ஏமாற்றிப் பின் கவலைக்குள் வீழ்ந்து ஆழாதே. அவரோடு கூடுமிடத்திற் கூடி, பிரியுமிடத்திற் பிரிந்து அவர்க்கும் உனக்கும் நன்மை தேடிக்கொள்வாயாக.

---

## சிறுவர்கள் பக்கம்

### நாம் கவனிக்கவேண்டிய மஹான்களுடைய அரிய உபதேசங்கள்.

1. நல்வார்த்தை கூறுவதில் தேக கஷ்டமுமில்லை. பண நஷ்டமுமில்லை. ஆனால் யாவரிடமும் நல்வார்த்தை கூறுவோனுக்கு அது அன்பையும் மரியாதை யையும் இரக்கத்தையும் சம்பாதித்துக்கொடுக்கிறது.

2. அன்பும், இனிமையான வார்த்தைகளும், வயதில் முதிர்ந்தோரிடம் மரியாதையும், கீழ்ப்பட்டோரிடமும் ஏழைகளிடமும் எப்போதும் இரக்கமும் சாந்தமும் இருக்கவேண்டியது அவசியம். அதனால் நமது வாழ்நாள் சமாதானத் தோடும், சந்தோஷத்தோடும் க்ஷேமத்தோடும் கழியும்.

3. தினந்தோறும் ஒரு தனியிடத்தில் அமைதியோடு உட்கார்ந்து கால் மணி அல்லது அரைமணிநேரம் "நாம்யார்? எங்கிருந்து இவ்வுலகிற்குவந்தோம்? பிறகு எங்கு செலகிறோம்? யாருடைய கருணைகிடைத்தால் இந்த உண்மையை அறியலாகும்?" என்று சிந்தித்துவருவாயாயின் எப்படியும் உண்மையை யறிய வழி யேற்படும்.

4. நமக்குக் கெட்டவர்கள் என்று தெரிந்திருப்பவர்களைப்பற்றி கெட்டவை களைக் கூறுவது நல்லதல்ல. அதிலும் சந்தேகத்தின்மேல் கூறிவிடுவது பெரும் பாதகம். உண்மையென்று தெரிந்துகூறுவதோ தருமமல்ல.

5. நல்லோருடைய நல்ல செய்கைகளைவிடக் கெட்டவைகளே உலகில் அதிகமாய் பகிரங்கப்படுவது வழக்கம். ஒருவனுடைய அனேக நற்காரியங்களுக் காக அவனைப் புகழ்வதைவிட அவனுடைய ஒரு தவறுதலுக்காக இகழ்வது அதிகமாகவிருக்கும். உலகில் கெட்ட எண்ணங்களும் பிறருக்குக் கேடு நினைப் பதும் அவ்வளவு பலமாயிருக்கின்றன.

6. ஆண்டவன் இரண்டு சமயங்களில் நகைப்பாராம். ஒருசமயம்—தங்கள் தந்தை வைத்துச்சென்ற பூமியைத் தமையன் தம்பி இருவரும் "இந்தப்பாகம் உன்னுடையது. அந்தப்பாகம என்னுடையது" என்று பங்கிட்டுக்கொள்ளும் போது. (இவர்கள் நம்தந்தையே யிதை விட்டுவிட்டு இறந்தாரே, இது சதமல்ல வென்று கருதாது பூமியைச் சதமாய் எண்ணிய மூடர்கள்)

இரண்டாவது சமயம்—

நோயாளி மிக்க அபாயமான நிலைமையி லிருக்கும்போது சுற்றத்தார் விசனப்படுகிறார்கள். அச்சமயத்தில் வைத்தியன் அவர்களைநோக்கி "நீங்கள்

பயப்படவேவேண்டாம். இவன் உயிருக்கு நான் ஜவாப்தாரி" என்று கூறும் போது.

இந்த மூடன் "ஆண்டவன் அமைப்பின்படி யாவும் நடக்கும். கடவுள் இவனைமரிக்கச் செய்யும்போது அதைத்தடுக்க ஒருவராலும் முடியாது" என்ற உண்மையை மறந்து பேசுகிறான்.

---

## ஸ்திரீகள் பக்கம்.

### கலியின் கூத்து.

ஒரு தந்தியடிக்கிற உத்தியோகஸ்தன் ரூ. 20 சம்பளத்தில் ரயிலில் வேலை பார்த்துக்கொண்டு இருக்கும்சமயத்தில் நெடுநாளாய்ப்புருஷன் வீட்டுக்குவராமல் தாய்வீட்டிலேயே வைத்திருந்த தன் மனையாளை உடனே தன்னிடம் கொண்டு வந்துவிடும்படிப் பலகடிதங்களும், தகுந்தமனுஷியர்களையும் அனுப்பியும் அஞ்சா நெஞ்சம் படைத்த ஆதிசேஷய்யன் கொஞ்சமேனும் மாப்பிள்ளையின் கடிதத்தையும், மனுஷியாளையும் லட்சியம்செய்யாமல் அனுப்பச் சௌகரியமில்லையென்று சாக்குப்போக்கு சொல்லிவந்தார். தந்திமாஸ்டர் பின்வரும் யோசனைசெய்தார். என்னவென்றால், நமக்கோ ஒருநிமிஷங்கூட ஒழியவுமில்லை, அடிக்கடி லீவும் கொடுக்கமாட்டேன் என்று மேலதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஸம்ஸாரம் இருந்தும் கையினால் சமையல் செய்துகொண்டு இராப்பகல் கண்விழித்துக்கொண்டு கைவலிக்கத் தந்தியடிப்பதே நம் தலைவிதியாகிவிட்டது. நம் ஸம்ஸாரமோ, ரூ. 450-க்கு பவுன் மாலை போட்டாலொழிய வருவதில்லையென்று பிறந்த வீட்டில் உட்கார்ந்திருக்கிறாள். ஒரு தந்தி, அஸ்தாவஸ்தையாய்த் தான் கிடப்பதாய்க் கொடுத்துப்பார்க்கவேணும் என்று, தன்மாமனாருக்கு தான் ஆபத்தான நிலைமையில் கிடப்பதாகவும் உடனே புறப்பட்டுத் தன் ஸம்ஸாரத்தையும் கூட்டிவிட்டு வரவேண்டுமென்றும் தந்தியடித்தார். மாமனார் தந்திவந்ததும், நேற்று சுப்பய்யர் நம் மாப்பிள்ளையைக்கண்டு பேசிவிட்டு வந்திருக்கிறார். இன்று அதற்குள் ஆபத்தென்ன, இதெல்லாம் பிசகு என்று எப்போதும்போல் சும்மாவிருந்துவிட்டார்.

மறுபடியும் தந்திமாஸ்டர் தாங்தோணி அய்யர், தான் இறந்துவிட்டதாய் மற்றொருவரைக்கொண்டு தந்தி யடிப்பித்துத் தானும் அதேவண்டியிலேறித் தன் மாமனார் ஊர்போய்ச் சேர்ந்து வழியில் தந்திச் சேவகனைப்பார்த்து 1-மணி பொறுத்து டெலிவரிசெய்யும்படி 8-அணா அவனிடம் கொடுத்துத் தான் 7-மணி இராத்திரியில் தன் மாமனார்வீட்டுப் பக்கத்துவீடு பாழாய்க்கிடந்ததினால், தான் தலையிற் முக்காடிட்டுக்கொண்டு படுத்திருந்து சங்கதிகள் எல்லாம் காதில்படும்படி யோகநித்திரை செய்தார்.

இதற்குள் தந்திச் சேவகன் ஆதிசேஷய்யரிடம் தந்தியைக் கொடுக்கவே அவர் இதொரு தந்திவந்தது. அவன் செத்ததந்தி என்றிருக்கும் என்று சொல்லிக்கொண்டே பார்த்தார். அப்படியேமாப்பிள்ளை செத்துப்போய்விட்டார் என்று தந்தி வேறொருமனுஷியன் அடித்திருப்பதைப்பார்த்து வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் அழத்தலைப்பட்டார்கள். கிராமம் சிறியதானதால் அக்கம்பக்கத்து வீட்டாரும் மற்றுமுள்ள உறவினர்களும் துக்கம் கேழ்க்கவந்து அமளியாயிருந்தது. தந்திமாஸ்டர் ஸம்ஸாரம் அழுததாவது, "ஐயோ! நான் 6-மாத காலமாய் என் புருஷனிடம் கொண்டுபோய் விடு, விடு, என்று என் தாய், தந்தையைக் கேட்டும், என் புருஷன் உடனே கொண்டுவந்து விடு, என்று 100-கடிதங்கள் போட்டும், 100-பேர் மனுஷியர்களை அனுப்பியும், நேற்று ஆபத்தா

யிருக்கிறேனென்று தந்தி யடித்துங்கூடத் துரோக சிந்தனையுள்ள என்பாவிப் பெற்றோர்கள் அனுப்பாம லிருந்துவிட்டார்களே. இப்போது நான் ஒருவர் முகமும் ஒருவருஷம் வரையில் பாராமல் மூளையிலறுத்துப்போகும்படி செய்தீர்களே. பாவிகளா!" என்று பதரிப் பதரி அழும்சமயத்தில், தாங்தோணி அய்யர் திடீரென்று எழுந்து இனி காரியம் பிசகாய்விடும் என்று, முகத்தை மூடிக்கொண்டு தன் ஸம்ஸாரத்தின்மீது எதுவும் தப்பில்லை என்று கண்டுகோராய்த் துக்கம் கேட்குமவர்களில் தானும் ஒருவராய் முக்காடிட்டுத் தன் ஸம்ஸாரம் எதிரில்போய் நின்று இரவு 8-மணியானதால் நன்றாய் தன் உருவம் தெரியாதபடி நின்று, "அம்மா கௌரீ, என்னசெய்கிறது. உனக்கு இப்படிப் பட்டகாரியம் வரலாகாது, ஏதோவந்துவிட்டது. இனிமேலாவது உன் பிறந்த வீட்டை எட்டிப்பாராம லிருக்கவேணும். எழுந்திரு, வாசலில் குதிரைவண்டி வந்திருக்கிறது நான் உன்னை அழைத்து உன்புருஷனிடம் சேர்ப்பித்து விடுகிறேன்" என்று சொல்லி முகத்திலிருக்கும் மூடுதுணியை நீக்கி மாப்பிள்ளை தாங்தோணி என்று சகலரும்பார்க்க நின்றார். அவரைக்கண்ட மாமன், மாமி இருவரும்வெட்கிப் பெண்ணை உடனே அவருடன் அனுப்பினார்கள். இம்மாதிரி அநேகர் வாழும் பெண்ணை வீட்டில்வைத்துக்கொண் டிருப்பதினால் மாப்பிள்ளை கொட்டம் அடங்கும் என்று மதியீனமாய்ச்சிலகாரியங்கள் செய்வதானது குடும்பத்திற்கு அகௌரவம். பிறகு தாங்தோணியய்யரும் தர்ம பத்நியாகிய சௌபாக்கியவதி கௌரியும் ஒன்றுசேர்ந்து குதிரைவண்டியிலேறிஸ்டேஷனுக்குச்சென்று ரயில்வண்டியிற் பிரயாணமாகினார்கள். ஆதலால், பெண்களை அதிக நாள் பிறந்தவிடத்தில் வைத்துக்கொள்வது இருவருக்கும் கெடுதலே.

"கற்புடை மகளிரெல்லாம் கணவனே தெய்வமென்பர்" "கல்லானாலும் கணவன், புல் ஆனாலும் புருஷன்" என்று கணவனையே தெய்வமாகக் கொள்பவர் கற்புடைய மகளீர்.

" கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை. "
" பேசுமனையாளிற் பேய்நன்று. "

---

(392-வது பக்கத்தொடர்ச்சி)

## 1. மனையாளுங் கணவனும் மனமொத்து வாழவேண்டியவிதம்.

இல்லறவாழ்க்கையிலிருக்கும் ஸ்திரீயும் புருஷனும் எவ்வாறு ஒருவர்க்கொருவர், கடவுளிஷ்டப்பிரகாரம் நடந்துகொள்ளவேண்டுமென்பது, முதியோர்களின் வாழ்த்துதலினால் தெளிவாய்விளங்கும். எவ்வாறெனில்:—மணவரையிலிருக்கும் தம்பதிகளாகிய மணமக்களை முதியோர்பார்த்து, தீபத்தின் ஒளியும் அனலும்போலும், மலரின் மணமும் நிறமும்போலும், விரலின் நகமுஞ் சதையும்போலும், நீங்களிருவரும் ஒருமித்து வாழ்வீர்களாகவென்று அருள்வாக்குப் பொழிவது நமது தேசத்தின் இயல்பு.

(அவற்றின்பொருள் யாதெனில்)—(1) தீபத்தின் ஒளியும் அனலும்போல ஸ்திரீயும் புருஷனும் ஒருமனப்பட்டு வாழ்வதே திண்ணம். அனலின்றி ஒளியிராதென்பது திண்ணம். ஏதாவதொரு வஸ்துவில் அனலின்றி ஒளியிருக்குமாயின் மனிதருக்குப் பிரயோஜனமாக இரவில் வெளிச்சத்தைக் கொடுக்கும் அனலோடுகூடிய தீபத்திலுண்டாகும் ஒளியாயிராதென்பது நிச்சயம். மனைவியானவள் தன் கணவனுடைய மேன்மையென்னும் ஒளியாயிருக்கிறாள். ஆகையால் எவனும் இல்லறவாழ்க்கையில் ஸ்திரீயின்றி மேன்மைபெற வியலாது.

அனலிலிருந்து ஒளியையாவது ஒளியிலிருந்து அனலையாவது பிரிக்கமுடியாது. பிரிக்கமுயன்றால் அவ்விரண்டு மில்லாமற்போகும். அவையிருந்த இடங்கூட கண்ணுக்குப் புலப்படாது. ஸ்திரீயாவது புருஷனாவது அல்லது இருவருமே யாவது (நல்லவர்களைப்போல் நடிக்கும்) துர்ச்சனரின் துராலோசனைக்குச் செவிகொடுப்பார்களேயாகில், ஒருவரைவிட்டு ஒருவர்பிரிந்து துஷ்டர் வசமாகி கனவீனமடைந்து தங்கள் காலமெல்லாம் அவமானத்தால் மூடப்பட்டு தன்னந் தனியே நின்று கலங்கித்தவிக்கநேரிடும். ஆகையால் இல்லறவாழ்க்கையிலிருக் கிறவர்கள் "நிதானம் பெரியதனம்" என்னும் முதுமொழிப் பிரகாரம் எக் காலத்திலும் எவ்விஷயத்திலும் நிதானமாய் யோசித்து நடப்பது அவசியமாம்.

(2) மலரின் மணமும் நிறமும்போல் கணவனும் மனைவியும் அன்பு பாராட்டி வாழ்வதேதிண்ணம்.—இவ்வுலகின்கண் வசிக்கும் மானிடர் யாவரும் நல்ல நிறமும் வாசனையும்பொருந்திய புஷ்பத்தையே விரும்புவது இயல்பு. நிற மாகிய கொழுனனும் வாசனையாகிய மனைவியும் ஒருமனப்பட்டு வாழ்வதே மலர்போன்ற குடும்பமெனப்படும். வர்ணத்திலிருந்து வாசனையையாவது வாசனையிலிருந்து வர்ணத்தையாவது பிரிக்கமுடியாது.—பிரிக்கமுயன்றால் கசக்கவேண்டியதாகும், அவ்வாறுசெய்தால் நல்லநிறமும் வாசனையுமாறிப் புஷ்ப மாகக் காணப்படமாட்டாது. அதுபோல, காதலனையும் காதலியையும் ஒருவரி லிருந்து ஒருவரைப் பிரிக்கமுடியாது.—பிரிக்கமுயன்றால் மனவருத்தமுண்டா கித்துன்பம்நேர்ந்து இல்லறம் சீர்கேடடையும். கணவனாவது மனைவியாவது அல்லது இருவருமேயாவது ஒருவரையொருவர் தூஷிக்கவுந் துன்பப்படுத்தவு மெத்தனித்தால், புஷ்பத்தைக் கசக்கினவுடனே, எவ்வாறு நிறங்குன்றி மணமாறி எதற்கும் பிரயோஜனப்படாமற் குப்பையிலெறியப்படுமோ அவ்வாறே, இவர் களும் யாவராலும் இகழப்பட்டு சன்மார்க்கர் நடுவிலிருந்து நீக்கப்படுவார்கள். ஆகையால் செய்யுந்தப்பிதத்தை ஒருவருக்கொருவர் பொறுத்து எவ்விஷயத்தி லும் நிதானமாய் நடந்துகொள்வதே மேன்மையாம்.

(3) நகமும் சதையும்போல் இல்லாளும் நாயகனும் ஒத்துவாழ்வதேதிண் ணம்.—விரலில்லாத கைகளையுடையவன் ஜீவனோடிருக்கும் புழுவுக்குச் சமான மானவன். ஏனெனில், விரலில்லாவிடில் எவ்வகைவேலையும் செய்யமுடியாது. விரல் மனிதனுக்கு மிக அவசியமான உறுப்பாம். விரலானது நகமில்லாம லிருந்தால் பூணில்லா உலக்கைபோலும், லாடமில்லாக் குதிரைபோலும் பிரயோ ஜனமற்றுப் போமென்பதைப்பற்றிக் கடவுளறிந்து, விரலைப் பாதுகாக்கவும் அதற்கு உதவிபுரியவும், நகத்தை விரலின் நுனியில் அமைத்திருக்கின்றார். இவ்வளவு பிரயோஜனமுள்ள நகத்தைத் தன்னளவிற்கு மிஞ்சிவளரவிட்டால் நம்மையுங் காயப்படுத்தி வருத்தத்துக்குள்ளாக்கி தானுஞ் சீக்கிரம் தன்னிடம் விட்டுப் பெயர்ந்து விழுந்துபோகும். அதுகடைசியாக எவ்வகைவேலைக்கும் பயன்படாமல் குப்பையில் எறியப்படும். ஆகையால் அதை அளவிற்கு மிஞ்சி வளரவிடாமல் அடிக்கடி மெதுவாய் சீவிவரவேண்டியது மிக்க அவசியமாம்.

"இல்லாளில்லா வீடு இடுகாடு"
"தாய்க்கு இரண்டாவது தாரம்"
"துணையில்லாவீடு துறந்தமண்டபம்"
"பண்ணுடிச்சியில்லாதபண்ணை பாழாகும்"
"மனைவியில்லாவீடு மண்மேடு"

என்னும் முதுமொழிகளின் கருத்தின்படி மனைவியானவள், விரலுக்கு நகத் தைப்போல் இல்லறவாழ்க்கைக்கு இன்றியமையாதவளாயிருக்கிறாள். இவ்வளவு பிரயோஜனமான இல்லறமாணிக்கம்போன்ற இந்த வாழ்வரசியை தன்னிஷ்டப்

பிரகாரம் நடக்க விட்டுவிட்டால், நாயகனையும் இழிவுக் குள்ளாக்கி தானும் துன்பத்திற் சிக் குண்டு அவமானத்தால் மூடப்பட்டு தன்காலமெல்லாம் ஆதரவற்று அலைந்து திரிய ஏதுவாகும். ஆகையால் ஒருவன் தன்மனைவியை நேசிப்பது உண்மையாயிருந்தால் "அடக்கம் ஆயிரம்பொன்" என்னும் மூதுரையின் கருத்தை அவளுக்கு அடிக்கடி விளக்கிக்காட்டி அவளைத் தன்னதிகாரத்திற்குள் வைத்து மரியாதையாய் நடத்தி வருவதே உத்தமம். மனைவி தன் பிரியத்திற்கிணங்கி நடக்காமல் அலட்சியம் செய்யும்படி இடங்கொடுப்பவன் தன் கைவிரலால் தன் கண்ணைக் குத்திக்கொள்கிற மூடன்போல் தனக்குத்தானே தீங்கு தேடிக்கொள்வான்.

## 2. மாதர்கள் காலைக்கடன்.

பெண்ணானவள் தினந்தோறும் நித்திரையிலிருந்து எழுந்திருக்கும்போதே தன் கணவனுடைய ஆயுள்விருத்திக்காக கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு அதிகாலையிலெழுந்து தங்கள் மனைவாழ்க்கைக்குரிய இஷ்டதெய்வங்களைப் பிரார்த்தித்து முடிந்தபின் தன்னுடைய காலைக்கடன்கழித்து கால்கரம் சுத்தி செய்துகொண்டு இல்வாழ்க்கைக்குரிய வேறு வேலைகளைத் தொடங்குமுன் சமனுத்த நிலத்தை எறும்புமுதலிய பிராணிகளுக்கு இம்சையில்லாதபடி விளக்கித் தூசுகுப்பை முதலியவற்றைப்போக்கி, இராத்தங்கி பழமைப்படாதபடி அழுக்கற்ற ஒரு பாத்திரத்தில் புதியதண்ணீரில் பசுவின் சாணம் ஒன்றையேகொண்டு முற்றத்தில் சாணந்தெளித்தல்வேண்டும் (இதுபற்றியே "மூக்குத்தியிட்டு முற்றந்தெளி" என்று மூதறிவோர் கூறியிருக்கிறார்.) பின்பு கைகளிலொட்டாதவண்ணமாய் நீரைக்கலந்து மெல்லியவஸ்திரங்கொண்டு வீடுமெழுகி கோலந்தீட்டியபிறகு தன்கொழுனரை யெழுப்பமுயலவேண்டும். ஒருபொழுதும் சூரிய உதயமான பின்பும், எஜமானராகிய மணவாளர் புறம்பே போனபின்பும் முற்றத்தில் சாணந்தெளித்தலும் மனைமெழுகலும் அல்லது கோலமிடுதலுஞ் செய்யப்படாது. மேற்கண்டவாறு விதிப்படி நடந்துகொள்ளும் மனையாட்டிகளுக்கு அறிவு, செல்வம், புகழ், நோயின்மை முதலியவைகள் நாளும்வளரும்.

## 3 சாணமிடவேண்டிய ஒழுங்குகள்.

சமனுத்த இடத்தை எப்பொழுதும் எறும்புமுதலிய ஊர்வனங்களுக்குத் தீங்குநேரிடாதபடி விளக்கி (பெருக்கி) தூசு, துரும்பு முதலிய யாவையும் நீக்கி இராத்தங்காததும் கிருமிகளுற்பத்தியில்லாததுமான பசுவின் இளங்கன்றின் சாணம் ஒன்றையே யெடுத்து நன்னீரால் கரத்தில் பற்றாதவண்ணம் கரைத்து மெல்லிய வஸ்திரங்கொண்டு மெழுகல்வேண்டும்.

துர்க்கந்தமான மேதி, எருது, மான், ஆடு இவைகளின் சாணங்களால் மெழுகலாகாது. அவ்வாறு மெழுகினால் வயதுகுறையும். சுத்தப்பசுவின்சாணம் கிடைக்காவிஷயத்தில் கோசலங்கொண்டு மெழுகவேண்டும். அவ்வாறு மெழுகுங்கால் யாதொரு எண்ணமும் மனதில் நாடாதபடியும் யாதொரு குற்றமும் நேரிடாதபடியும் மெழுகவேண்டும்.

## 4. வீடு சுத்தம்.

வீடுமுதலானவற்றிற்குத் தீட்டுமுதலான அசுத்தம்நேரிட்டபோது வீட்டை விளக்குதல், மெழுகுதல், கோமூத்திரநதெளித்தல், சுண்ணம்பூசுதல், கொஞ்சம் மேல்மண்ணையெடுத்தப்பாற் போடுதல், பசுமாட்டை யொருநாள் வசிக்கும்படி செய்தல் இவைகளினால் அந்தப்பூமி பரிசுத்தப்படுகிறது. (தொடரும்.)

## "கொஞ்ச இடந்தந்தால் மிஞ்சஇடந்தேடிக்கொள்வான்."

மேற்கூறியுள்ள இப் பழமொழியானது எக்காலத்திலும், எவ்வெத் தேசத்திலும், எவ்வெம்மதத்தினருக்கும் சர்வசம்மதமாய் உண்மையாக விளங்கி வருகின்றதை நாம் நம்வாழ்நாட்களில் கண்ணாரக் கண்டுங் காதாரக் கேட்டும் வருகின்றோமல்லவா? இஃது இவ்விதம் இருந்தும், நம்மில் பெரும்பாலரும் அடிக்கடி ஏமாந்து போகிறோம்.

எவ்வித மெனில், நமது அண்டை யயலிலுள்ள ஓர் மனிதன், இவ்வுலகில் இயற்கையாகவே யமைந்துள்ள கஷ்ட நிஷ்டூரங்களாலும் பசிப்பிணியாதிகளாலும் வருந்தி உழலுங்கால் நமது ஏழை மனதானது கோழைத் தனமாகச் சற்றே கசிந்துருகி, அன்னவனை அவ்விடுக்கண்ணினின்றும் நம்மாலியன்றமட்டும் விடுவிக்கத் தூண்டுகின்றது. இவ்வித அன்பிற்கே கருணை என்று பெயர். இக் கருணையினால் லேவப்பட்டு இடுக்கண்ணால் வருந்தும் மனிதனுக் குதவிபுரிகின்றனர் கருணாநிதிகள்.

ஆனால் இடுக்கணால் வருந்தும் மனிதர் சிலரோ சுத்தக் கெட்ட குணமுடையவராக இருக்கின்றமையால், அவர்கள் தமக்குதவி புரிந்த நல்லோருக்கு, தனக்கு நோய் தீர்த்தவிடதாரிக்குத் தீங்குவிளைத்த வேங்கைப்புலியேபோல், சிற்சில சமயங்களில் தீமையினையே விளைவிக்கின்றனர், விளைவித்தும் இருப்பதை நாம் அறிவோம். உதாரணமாக,

ஏழை மனிதனொருவன் நமது வீட்டிற்கு வந்து யாதேனுங் கொடுக்கும்படி கெஞ்சுகிறான். நாம் 'தருமமே ஜெயம்' என்பதற்கேற்ப அவனிடத்தில் இன்சொற்கூறி அன்னபானாதிகளும் ஆடைகளும் அளிக்கின்றோம். அம் மனிதன் நல்லவனாக விருக்கின் அடிக்கடி நம்மைத் தொந்தரவு செய்யான்; அல்லாதவனாக விருப்பின் அடிக்கடி நம்மிடம் வந்து முன்போலவே தரும்படி தொந்தரை செய்வதை நாம் காண்கின்றோம். இதுபோலவே பெரிய காரியங்களிலு மிருக்கும்.

கெட்ட நடக்கைக்கு ஒருவன் கொஞ்சம் இடங்கொடுத்தால் அது கொஞ்சம் கொஞ்சமாய் விர்த்தியடைந்து முடிவில் அவனைத் தனக்கு அடிமையாக்கிக் கொள்ளுகிறது. நன்னடக்கைக்குப் பலதரம் பழகவேண்டும். தூர்நடக்கையோ ஒருதரம் பழகிவிட்டால் பிறகு மிகச்சுலபமாய்த் தானே விர்த்தியடைந்துவிடும்.

இதுபோலவே இருக்கின்றது நமது குடும்பவிஷயத்திலும். மேனாட்டு நாகரீகம் தற்காலத்தில் உலகமெங்கும் உலாவி ராஜசூய யாகமும் திக்கு விஜயமுஞ் செய்துகொண் டிருக்கின்றது. ஸ்திர புத்தியினையும், நல்லறிவினையும் படைத்தவர் அல்லாத கோழை புத்தியையுடைய ஏழை மதியினராகிய சிறுவர் சிறுமியர் சிலர், அதில் நாம் கொள்ளத்தக்கது இன்னது தள்ளத்தக்கது இன்னதென்றுணராதவர்களாய் திக்குவிஜயஞ்செய்து அட்டகாசம் புரியும் அந்நாகரிகத்திற்குப் பணிந்து தெண்டனிடுகின்றனர். அந்தோ என் செய்வது! என்ன பரிதாபம்! ஆடவரல்லாத இச்சிறுமியரும் இந்நாகரீகக் கள்ளையுண்டு கூத்தாடுகின்றனரே! இவர்கள் தங்கள் முன்னோராகிய கற்புக் கரசிகளை மறந்தனரோ? தமயந்தி, சந்திரமதி, சாவித்திரி, அருந்ததி, சீதை இவர்கள் திவ்வியசரித்திரங்களில் ஒன்றையேனும் ஒருமுறையோதி யறியாரோ? தற்காலத்திய சிறுமிகள் சிலர் ஆங்கிலேய ஸ்திரீகளைப் பின்பற்றுவதில் வெகு ஜாக்கிரதையாக விருக்கின்றனர். "கணவனே கடவுள்" என்பதை முற்றிலும் மறந்தனர். கணவனை அவர் பெயர் சொல்லி அழைத்தால் யாது கேடு என்று வெகு துணிகரமாக அழைக்கின்றனர். பேர்சொல்லி அழைப்பதோடு மட்டும் இஃதொழியுமோ? வென்பதை பேதமையை அணிகலமாக அணிந்துள்ள இப்பெதும்பையர் அறிகிலர்.

ஆதலால் இப்பேதைப் பெண்களுக்கு அதிபதியாக இருக்கும் அவர்கள் பெற்றோர் பெரியோரேனும் உற்றார் உறவினரேனும் வெகு ஜாக்கிரதையாக விருந்து அவர்களுக்கு எத்துணை சுவாதந்திரியம் கொடுத்தல் நலமென்று தோற்று கின்றதோ அத்துணை சுவாதந்திரியமே கொடுத்தல் நலம். இதுவே ஏற்ற சமயம். 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டியது.' வெள்ளப் பிரவாகம்வந்து வாரி யடித்துக்கொண்டு போவதற்கு முன் எச்சரிக்கையாக விருக்க வேண்டியது. "வெள்ளம் வருவதற்கு முன் அணைகோலிவையார் பெருகு தற்கு என்ன செய்வார் பேசு." என்றார். நம் நாட்டு நல்லாரும் அறிந்தும் அறியாதார்போல் பாவிக்கும் இப்பேதையருககுச் சுவாதந்திரியம் மட்டுக்கு மிஞ்சிக் கொடுத்தால், அவர்கள் அதனை நாளடைவில் பெரிதாக்கித் தங்களுக்குப் பெரியோரான ஆடவரைச் சிறிது காலத்துக்குள் அடிமையாக்குவதில் எட்டுணையேனும் ஐயமின்று. இதுபோலவேதான், தாய்தநதையரும் உபாத்தியாயரும் தங்கள் தங்கள் கீழுள்ளவருக்குத் தகுந்தபடி சுவாதந்திரியங் கொடுத்துத் தங்களையும் தங்களுககுக் கீழுள்ளவர்களையும் இரட்சிக்கக்கடவர். சுபம்..

குறிப்பு:—கல்விகற்கும சிறுவர்க்கு விதி விலக்குகளின்படி நடப்பதும், பெற்றோர், உபாத்தியாயர் இவர்கள் தஙகளைக் கண்டித்து அடக்கி யாள்வதும் கஷ்டமாகவும் வெறுப்பாகவும் தோன்றுகிறது. அது தங்கள் நன்மைக்காகவே என்று அவர்கள் உணரார்கள். தங்கள் மனம்போனபடி ஆடியோடித் திரிய விட்டுவிட்டால் மிக்க சநதோஷம். இதைப்போலவே சிலமாதர் தாமும் ஆடவர்களைப்போல எங்கும போகவும் வரவும் மனம்போனபடி நடக்கவும் சுயேச்சையாய் விடப்படவேண்டுமென்றும், அதுதான் நாகரீகமென்றும் கருதுகின்றனர். அந்தோ! தங்களை யப்படி விட்டுவிடாதிருப்பது தங்களுடைய முக்கிய நன்மையைக் கருதியே யென்று அவர்களறியார்கள் போலும். ஆயினும் நமது நாட்டு மாதரில் மிகச்சிறு பாலாரே அத்தகைய புது நாகரீகமென்னும் மாயவலையில் சிக்குபவர்கள். ஆன்றோர் அத்தகையோரை யாரம்பத்திலேயே அவ்வழியினின்றும் திருப்பிவிடவேண்டும். தாய்மார் இதுவிஷயத்தில் விசேஷ கண்ணோக்கம் அவசியம் வைக்கவேண்டும். (ப—ர்.)

---

## காபி தேயிலையினுடைய குணங்கள்

மாசி மாதத்திய சஞ்சிகையில், "காபி, தேயிலை பானம் அறிவிப்பு" என்னும் தலைப்பெயருடன் எழுதிய வியாசத்தை நேயர்கள் கவனித்திருக்கலாம். "காபி," என்கிற பெயரை நமது இந்து தேசத்தில் அறியாதவர்கள் கிடைப்பது மிகவும் அரிது. காலையில் எழுந்தவுடன், ஒருவருக்கொருவர் முக்கியமாய் கேட்கிறது காபி சாப்பிட்டாய்விட்டதா என்றுதான். சில சகோதர சகோதரிகள், அப்படிச் சாப்பிடாதவர்களை ஏளனம் செய்கிறது எல்லோருமறிந்த விஷயம். நாம் வெள்ளையரிடமிருந்து கற்றுக்கொண்ட கெட்ட குணங்களில் காபி தேயிலையும் ஒன்று. நாம் அவர்களிடமிருந்து நல்ல குணங்களை கிரகிக்கவில்லை. நாம் நமது முன்னோர்களைப் பின்பற்றி நடந்தால் அவர்களிடமிருந்து அறிவதும், அவசியமில்லை. அப்படி ஏளனம் செய்யும் சகோதர சகோதரிகளே! அதனுடைய குணங்களைக் கொஞ்சம் ஆராய்வீர்களாக. காபி விதையில் காபின் (Coffin) காபின் புளிப்பு என்றும் தேயிலையில் (Thein) தீன் என்னும் விஷசாரங்களிருக்கின்றன. காபி விதை வறுக்கப்படும்பொழுது விதை உப்புவதால் காபின் புளிப்பு என்கிற சாரங்கள் அதிகமாக உண்டாகிறதும் தவிர அவ்விடத்தில் ஓர் வித வாய்வும் உண்டாகிறது. வறுத்துடைத்த விதையை

கஷாயம்போட்டுச் சாரமிறக்கும்பொழுது அக்கஷாயத்தில் மேற்படி சாரங்கள் அப்படியே வந்துவிடுகிறது. பச்சைக் காபிவிதையை ஊறப்போட்டுள்ள பசுமையான தண்ணீரையும் பச்சைத் தேயிலையின் கெட்டியான கஷாயத்தையும் ஈக்கள் முதலிய அற்ப பிராணிகள் சாப்பிடுமாகில், அவைகளினுடைய உயிர்கள் போய் விடுகிறதென்றும், எவ்வளவுக்கெவ்வளவு கஷாயம் கெட்டியாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு எலி முதலிய பிராணிகள்கூட உயிர் நீத்துவிடுகிறதென்று அனேக டாக்டர்கள் நிரூபித்திருக்கிறார்கள். காபி, தேயிலையை சாப்பிட்டவுடன் உற்சாகமும், ஊக்கமும் உண்டாகிறதென்பது வாஸ்தவமே. ஆனால் அவைகள் மற்ற உணவுப்பொருள்களைப்போல் ஜீரணித்து இரத்தமாகமாறி சரீரத்தில் சேராமல் பானம் பண்ணிய சிறிது நேரத்திற்குள் நரம்பு மண்டலம் வழியாக உடம்பு முழுவதிலும் வியாபித்து ஓர் வித போலி பலமும், உற்சாகமும், ஊக்கமும் கொடுத்து சிறிது நேரத்திற்குள் மறைந்துவிடுகிறது. அப்படித் திடீரென்று நாடிகளை அதி தீவிரமாக ஓட்டி நரம்புகளை ஜாஸ்தியாகத் தூண்டுவதால் பாரிச வாய்வு நீர் ரோகம் முதலிய ரோகங்கள் உண்டாகி ஆயுளைக் குறைக்கிறது. ஆகையால் சகோதர சகோதரிகளே! காபி, தேயிலை முதலிய உடனே உற்சாகங் கொடுக்கும் பானங்களைப் பருகுவதால் பின்னால் கெடுதியே உண்டாகும் என்று தாழ்மையாய்த் தெரிவித்துக்கொண்டோம்.

---

## வைத்தியக் குறிப்பு.

விஷசுரத்தினால் சரீரம்கெடும் வழிகளையும் அவற்றின் சிகிச்சைகளையும் சொன்னோம். இனி தத்துவ ஆராய்ச்சியின்வழியாய் என்புத்திக்குவிளங்கியவரையில் விவகரிக்கின்றேன். அஃதாவது நமது சரீரங்களில் வியாதி யுண்டாவதற்கு மூன்று தோஷங்கள் சொல்லப்படுகின்றன. அவை வாயு, பித்தம், சிலேத்துமம். (Wind, Bile & Phlegm) காற்று, பித்தம், கோழை என்று மூன்றாய் பிரிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றால்உண்டாகும் வியாதிகள் அந்தந்தக்காலத்துக்குத்தக்க படியுண்டானாலும் அவ்வவற்றின்காலமும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அவை யாதெனில் மழைகாலங்கள் அதாவது ஆடி, ஆவணிமாதங்கள் வாயுகாலமென்றும் கார்த்திகை மார்கழிகாலங்கள் சிலேத்துமத்துக் குரியனவென்றும் சித்திரை வைகாசிமாதங்கள் பித்தகாலமென்றும் அந்தந்த காலங்களுக்குத் தக்கபடி காலத்தையனுசரித்தே ஔடதங்களை உபயோகிக்கவேண்டுமென்றும் அதற்கு உபசாந்திகளாய்செய்யும் சிகிச்சைகள் பலவிருந்தாலும் காலத்தையனுசரித்து மேற்சொன்ன 3 தோஷங்களால் உண்டாகும் வியாதிகளுக்கு பரிகாரம் செய்துகொள்ளலாம். இம்மூன்று தோஷங்களும் மிஸ்ரயித்து உண்டாகும் வியாதிகளுக்கு முன்னோர்கள் ஔடதங்களைச் சொல்லிவைத்திருக்கின்றார்கள். இம்முத்தோஷங்களால் உண்டாகும் வியாதிகளுக்கு ஸ்தானபேதங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவையெனில் வாயுஅல்லது வாதம் என்பதற்கு இடுப்பின்கீழ் உண்டாகும் வியாதியென்றும், பித்தம் என்பதற்கு வயற்றிலுண்டாகும் வியாதி என்றும், சிலேத்துமம் என்பதற்கு இருதயத்துக்கு மேல்பாகங்களிலுண்டாகும் வியாதிகளென்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவற்றுள் விஷசுரமானது வாயு சம்மந்தமான ரோகம் என்றாலும் பித்தப்பையையும் அநுசரித்திருக்கின்றபடியால் இதை மிஸ்ரமமான வியாதியெனச் சொல்லலாம். ஆனபடியால் இதற்கு குறித்த ஔடதங்களையே உபயோகித்தாலன்றி வேறு பரிகாரங்களால் நிவர்த்தியாகாவாம். சுரமானது உட்கொள்ளும் விஷவாயு ஒன்றினாலேயே உண்டானாலும் உட்சென்றவுடன் பித்தப்பையையும் அநுசரித்துக் கொள்ளுதலால்

5

இதை மிஸ்ரம வியாதியென கூறுவதில் சந்தேகமில்லை, சென்ற மாதத்தில் சென்னை இந்துவென வழங்கும் இங்கிலீஷ் நாமம்பூண்ட தினசரி பத்திரிகையில் நமது தேசத்தில் அவதரித்து ஆரிய சிகிச்சைகளில் வெகுநாளாய் நம்பிக்கை ஏற்படாதிருந்து வந்த டாக்டர் லக்ஷ்மிபதி பி. ஏ. எம். பி. சி. எம் என்னும் பட்டத்தைப்பெற்ற ஒருநிபுணர் சொல்லியதாவது மேல்நாட்டார்களால் உபயோகித்துவரும் ஔடதங்கள் பூராவும் நம்தேசத்திலுள்ளன வென்றும் நாமே தயாரித்துக்கொள்ளக் கூடியனவென்றும் மேல்நாட்டு ஔடதத்தை விட நம் நாட்டு ஔடதங்களே உயர்ந்தவை என்றும், மேல்நாட்டு வைத்தியத்தில் பழகிய ஒவ்வொரு டாக்டரும் தம்தேச சிகிச்சைகளையும் பரிசீலனம் பண்ண வேண்டுமென்றும், சிற்சிலர் நம்தேச வைத்தியர்கள் பிறர்க்குச்சொல்லும் உதார குணமில்லாதவர்களென்று சொல்லுவது பிசகென்றும், அதற்கு திருஷ்டாந்தமாய் பண்டிட். கோபாலாசார்லு அவர்களை தனக்கு பிளேக் ஔடதத்தின் முறை தெரியவேண்டுமென்றதற்கு அவர் கூடியவரையில் சொன்னது அவர்மனதை திருப்திகரமாகச் செய்ததென்றும், டில்லி வைத்தியசபையில் விஷசுரத்தைப் பற்றிப் பேசியபோது பலவைத்தியர்கள் பலவித சிகிச்சைகளை விஷசுரத்திற்குச் சொன்னதாகவும் கொய்னு ஒன்றைத் தவிர வேறு ஔடதமில்லையென்று மேல்நாட்டார் கொண்டுள்ளது தப்பென்றும் கொய்னுவால் குணமாகாத அநேக சுரங்கள் கொண்ட கசிந்து என்னும் மருந்தால் குணமாகின்றதாயும், இத்தேசங்களில் 1 பவுன் 2 அணுவிற்குக் கிடைக்கப்படுமென்றும் கொய்னுவைப்போல் கண் பஞ்சடையச்செய்தல், காது கேளாதுபோதல், பித்தமதிகரித்தல், முதலான தோஷங்கள் அதனிட மில்லையென்றும் தாராளமாய் உபயோகிக்கக் கூடியன வென்றும் ஒரு பிரசித்த டாக்டர் பிரசங்கித்ததாயும் சொன்னர். அன்றியும் ஆயுர்வேத டாக்டர்கள் மாதாந்தர பத்திரிகை யொன்றை யாரம்பித்து அதில் ஒவ்வொருவரும் உபயோகித்து வரும் ஔடதங்களையும் அவர்கள் குணம் செய்த வியாதிகளையும் எழுதிவருவார்களானல் கூடியசீக்கிரம் நமது ஆயுர்வேதம் முன்னுக்கு வருமென்றும் சொல்லுகின்ருர். இவைகளை நோக்கியாவது இனி நம்தேச சிகிச்சைகள் பலர்க்கும் பயன்படுமாறு பிரார்த்திக்க வேண்டியவர்களாகின்ருேம்.

---

## கற்கோட்டை—நாவல்.

(398-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனுக்கு வயது சுமார் 25 முதல் முப்பதிற்குள் இருக்கும். அக்கால வழக்கப்படி அவன் சிறுதாடியும் வைத்திருந்தான். அவன்பெயர் லோகநாயகன். பார்வைக்கு நாணயமானவன். செல்வராயருக்கு ஆரம்பமுதலே அவனிடம் ஒருவித நல்ல அபிப்பிராயமும் நட்பும் உண்டாயிற்று. ஒருநாள் அவர் தன் சகோதரியிடம் அவனைப்பற்றிப் பேசும்போது, "அவன் நல்ல பெரியமனிதர்களிடமிருந்து சிபாரிசு கடிதங்கள் கொண்டுவந்திருக்கிருன். புராதனமாய் கௌரவமும் செல்வமும் பொருந்திய ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன். இப்போதே அவனிடம் மிக்க செல்வமிருப்பதாகவேதெரிகிறது. எல்லாவற்றையும் கருத அவன் நமது கமலாம்பாளை மணம்புரிய எண்ணங்கொண்டால் மிக்க நலமாகவேயிருக்கும்" என்று கூறினர்.

தங்கம்மாள் "கமலாம்பாள் அவனை மணம்புரியப் பிரியப்பட மாட்டாள் என்று நினைக்கிறேன்" என்ருள்.

**செல்வராயர்.**—" என்ன, பிரியப்பட மாட்டாளா ? ஆ, நீ சொல்வது இன்ன தென்று தெரிந்துகொண்டேன். ஆனால் அந்நாட்டங்களனைத்தையும் இது வரையில் மறந்து விட்டிருப்பாள் என்று நம்புகிறேன். அவள் எப்போதும் வணக்கமுடையவள். ஒருபோதும் தன் தந்தையின் கட்டளையை மீறி நடக்கமாட்டாள்."

**தங்கம்மாள்.**—" அவள் சந்தோஷமாய் மணம் புரிந்துகொண்டு வாழ்க்கையில் நிம்மதியாய் நிலைத்து விட்டால் எனக்கு மிக்க சந்தோஷமே. அப்போது நான் கலக்கமற்ற மனதோடு மரணத்தை யெதிர்பார்ப்பேன். ஆனால் அவள் ஒருவித பிடிவாத எண்ணமுடையவள். அதே எனக்குப் பயமாயிருக்கிறது."

**செல்வராயர்.**—லோகநாயகன் அவள் விஷயத்தில் பிரியங்கொள்வானென்றே நம்புகிறேன். இங்கே ஒரு கிளை வர்த்தகச்சங்கம் ஏற்படுத்தி அதன் மேற்பார்வைக்காக அவன் இங்கேயே யிருக்கவெண்ணி யிருப்பதாய்த் தெரிகிறது. அவன்மூலமாய் அவன்தந்தை யெனக்கனுப்பிய கடிதத்திலும் அதைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. அக்கடிதத்தை யுனக்கு வாசித்துக்காட்டினே னல்லவா ? போகப்போக பார்ப்போம்.

நாலைந்து வாரங்கள் கழித்து ஒருநாள் செல்வராயர் நகரத்திலிருந்து வீட்டிற்குத் திரும்பிவந்ததும் மிக்க சந்தோஷத்தோடு தன் சகோதரியை நோக்கி,

" பார்த்தையா நான் முன்னமே கூறவில்லையா. சங்கதி முடிவிற்கேவந்து விட்டது. லோகநாயகன் நேராய் அதைப்பற்றி யென்னைக் கேட்டான். நான் எதிர்பார்த்ததைவிட அதிகமான சந்தோஷமாகவே முடிந்தது. அவர்கள் மிக்க செல்வவந்தர்களென்று எனக்கு முன்னமே தெரியும். நாம் சீதனமாய்க் கொடுப்பது அவள்பேரிலேயே யிருக்கட்டுமென்று கூறிவிட்டான். அதுமட்டுமல்ல. கலியாணதினம் தான்வேறு ஐம்பதினாயிரம் பவுன் கமலாம்பாள்பேருக்கே வைப்பதாய்க் கூறிவிட்டான். அவன் இங்கேயே வசிப்பதென்று தீர்மான மாய்விட்டது. அவன் தந்தையே யாவற்றிற்கும் சந்தோஷத்தோடு ஒப்புக்கொண்டு அவனுக்குக் கடிதம் அனுப்பி யிருக்கிறார் " என்றார்.

**தங்கம்மாள்:**—நீ யென்ன பதில் கூறினாய் ?

**செல்வராயர்:**—" என்ன அக்கா. பைத்தியமா உனக்கு ? இப்படிப்பட்ட நேர்த்தியான ஏற்பாட்டிற்குச் சந்தோஷமாய் ஒப்புக்கொள்ளாமல் வேறென்ன பதிலளிக்கிறது. இனி நீயும் அரியநாயகியும் நமது கமலாம்பாளுக்குத் தக்கவிதமாய்ப் புத்திகூறி இனி லோகநாயகன் இங்குவரும்போது அவனிடம் திருப்தியானவிதமாய் நடந்துகொள்ளும்படி செய்யவேண்டும் " என்றார்.

தங்கம்மாள் தன்னாலானமட்டும் அப்படியே செய்வதாய்க் கூறினாள்.

செல்வராயர் விருப்பத்தின்படி தங்கம்மாளும் அரியநாயகியும் கமலாம்பாளுக்குத் தக்கவிதமாய்ச் சங்கதியைக் கூறினார்கள். அவளுக்கோ சொல்லொணா வியப்பும் துயரமும் உண்டாய்விட்டது. அவர்கள் ஆசாரப்படி பெண்ணும் பிள்ளையும் சிலகாலம் பழகி யொருவர் நடத்தை யொழுக்கம் ஒருவர்க்குத் திருப்தியாய்த்தோன்றி யிருவரும் பரஸ்பரக்காதல் கொண்டபின்புதான் பெற்றோர் முதலிய பெரியோர் அதைப்பற்றி ஏற்பாடுசெய்யவேண்டும். அதே நாகரீகமான ஒழுக்கம் என்பது அவர்கள் கொள்கை. அப்படிக்கின்றி பெண்ணைக்கேளாமலே தகப்பன் அவளை யொருவனுக்கு மணம்செய்து கொடுப்பதாய் ஒப்புக்

கொண்டு பிறகு அவளுக்குச் சங்கதியைக்கூறவே அவளுக்கு மிக்க வியப்பாய் விட்டது. தான் காதலித்த கண்ணனையன்றி வேறெவனையும் மணம்புரிய அவள் மனம் சம்மதிக்கவில்லை. ஆனால் தன் தந்தைக்கு மனோவியாகுலம் உண்டாகும் வண்ணமாய் நடந்துகொள்ள அவளுக்குப் பிரியமில்லை. அதோடு அந்த வாலிபனோ தான் கண்ணன் அல்லவென்றே சாதிக்கிறான். கண்ணன் சங்கதியொன்றுமே தெரியவில்லை. அப்படியிருக்க வீணாய் நமது தந்தைக்கு ஏன் வியாகுலத்தை யுண்டாக்கவேண்டும் என்று நெடுநேரம் சிந்தித்து முடிவில் "நமது மனோநிலைமையும் அதன்பிரியமும் எப்படியிருந்தாலும் இருக்கட்டும் நமது தந்தையின் பிரியப்படியே நாம் நடந்துகொள்ள முயலவேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டாள்.

பாம்பின்கால் பாம்பறியும் என்றபடி தங்கம்மாளுக்கும் அரியநாயகிக்கும் மட்டும் கமலாம்பாளுக்கு லோகநாயகன்மேல் காதலேயில்லையென்றும், அவள் தன் மனோபீஷ்டத்திற்குமாறாய் தன் தந்தைக்காக இதிற்சம்மதமுடையவள் போல் நடிக்கிறாளென்றும் தெரிந்துகொண்டார்கள். அதனால் இப்படிப்பட்ட சம்மதமில்லாத கலியாணத்தில் இவளுடைய வாழ்நாள் சுகமற்றதாயும் துக்ககரமாயும்முடியுமேயென்று மிக்கவியாகுலமடைந்தார்கள். ஆனால் அவர்கள்இயற்கையாகவே செல்வராயரின் விருப்பத்திற்கு எள்ளளவும் மாறாய் நடப்பவர்களல்ல.

அரியநாயகி மிக்க பொறுமைவாய்ந்தவள் என்பது நமக்கு முன்னமேதெரியும். எவ்வாறெனின் முன்பு பத்துபன்னிரண்டு வருடங்களுக்குமுன் கமலாபாய் இராணியிடம்தான் முத்துப்பெட்டியைக்கொண்டுபோனபோது அதிலிருந்தபதக்கத்தைக்கண்டு இராணி மனக்கலக்கமடைந்து தன்னை விசாரித்ததிலிருந்து தன் பிறப்பில் ஏதோபெரியமர்மம் இருக்கிறதென்றும் அதற்கும்இராணிக்கும் ஏதோ சம்பந்தமிருக்கிறதென்றும் அவள்மனதிற்றோன்றியது. அதோடு அந்த மர்மம் தங்கம்மாளுக்குத் தெரியுமென்பதும் அவளுக்குத்தெரியும். அப்படியிருந்தும் தங்கம்மாள் நமக்கு இன்னும் அதைக்கூறாதிருப்பது நமது நன்மையைக்கருதியதாகவேயிருக்கும். காலம்வரும்போது தானே வெளிவரும் என்று சிந்தித்துக்கொண்டு அதைப்பற்றி பிரஸ்தாபிக்காமலே யிருந்தாள்.

மறுவாரம் கலியாணத்தைப்பற்றி நிச்சய ஏற்பாடு செய்துகொள்வதற்காக செல்வராயர் தன் புத்திரியையும் அரியநாயகியையு மழைத்துக்கொண்டு தன்நகர மாளிகைக்குச்சென்றார். தங்கம்மாள் திடீரென்று அசௌக்யமடைந்ததால் தான் வராவிட்டாலும் தனக்காக அச்சடங்கு நிறுத்தப்படாமல் நடக்கவே வேண்டும் என்று கூறினாள். செல்வராயருடைய நண்பர்கள் சிலரும் அச்சமயம் வரவழைக்கப்பட்டார்கள். மணமகனுக்கும் மணமகளுக்கும் அறிமுகமுண்டாக்கி வைக்கப்பட்டது. அச்சமயம் கமலாம்பாள் முகத்திலுண்டான திகிலையும் துயரத்தையும் கண்ட அரியநாயகி "ஆ! இதுமட்டும் சந்தோஷமாயின்றி விசனமாய் முடிகிற விஷயமானால் இதிற் சம்பந்தப்பட்ட நானும் பெரிய குற்றவாளியாய் விடுவேன்" என்று மனதில் எண்ணிக்கொண்டாள். இரண்டாவது வாரம் கலியாணச் சடங்கை நிறைவேற்றுவதற்கு நாள் வைத்துக்கொள்ளப்பட்டது. கமலாம்பாள் ஒருவித அசௌக்கிய மடைந்தவள்போல் காணப்பட்டதால் அவளும் அரியநாயகியும் உடனே கற்கோட்டைக்குத் திரும்பி வந்து விட்டார்கள். செல்வராயர் அன்றிரவு நகரமாளிகையில் தங்கியிருந்து மறுநாள் தன் மாளிகைக்குத் திரும்பினார்.

கடைசியில் கலியாணம் நடக்கவேண்டிய நாள் உதயமாயிற்று. அன்று காலை வானத்தில் பனி அதிகமாய் மூடிக்கொண்டிருந்ததாலும் சாதாரணமாகவே யாவர்க்கும் உற்சாகக் குறைவு ஏற்பட்டது. கமலாம்பாளுடைய மனம் மரண

தண்டனையை யனுபவிப்பதற்காக கொலைக்களத்திற்குக் கொண்டுபோகப்படும் ஒரு குற்றவாளியின் மனம்போலிருந்தது. அவளுடைய இருதயத்தின் மேல் ஒரு பெரிய பாறுங்கல்லை வைத்திருப்பது போலிருந்தது. தன்னை யறியாமலே தான் ஏதோ ஒரு பெரிய ஆபத்தில் சிக்கிக்கொள்ளப்போவது போல் அவளுக்கு ஒரு உணர்ச்சி யுண்டாயிற்று. உடனே அவள் தனக்கு ஏற்படுத்தப்பட்ட தோழிப்பெண்களை நோக்கி, "தயவுசெய்து வெளியிற் செல்லுங்கள். சற்றுநேரம் ஏகாந்தமாய்க் கடவுளைப் பிரார்த்திக்க எனக்கு விருப்பமாயிருக்கிறது" என்றாள். யாவரும் அதற்குச் சம்மதித்தார்கள். ஆனால் அரியநாயகி மட்டும் மிக்க துயரத்தோடிருந்தாள்.

யாவரும் அறையை விட்டுச் சென்றபின் கமலாம்பாள் இருகண்களிலும் நீர் பெருக்கிக்கொண்டே, "ஓ ஆண்டவனே! எனக்கு ஏதோ ஒரு பெரிய தீங்கு நேரிடும் போலவே தெரிகிறது. ஆயினும் என் தந்தை எனக்குக் கெடுதி தேடுவாரா! எப்படியோ! கருணாநிதியாகிய தாமே என்னைக் காபபாற்றவேண்டும்" என்று பலவாறு துதித்தாள்.

சற்றுநேரத்திற்குள் யாவரும் ஆடம்பரமான உடைகளை யணிந்து கலியாணச்சடங்கை நிறைவேற்றக் கோயிலுக்குப் போகுமுன் விருந்துண்ண உட்கார்ந்தார்கள். லோகநாயகன் என்ற மணமகனும் நேர்த்தியான விலையுயர்ந்த உடைகளையணிந்திருந்தார். அவனுடைய தாய்தந்தையர் வரவில்லை. ஆனால் ஆசீர்வாதக்கடிதமும் மருமகளுக்குச் சிலபரிசுகளும் அனுப்பியிருந்தார்கள். போஜனம்முடிந்ததே லாயர் சீதனப்பொருள்களைப்பற்றிய பத்திரத்தை வாசித்துக்காட்டத்தொடங்கினார். மணமகன் கலியாணப் பெண்பேரில் 50 ஆயிரம் பவுன் எழுதிவைத்தான். ஆனால் யாவும் பத்திரங்களும் உண்டிகளுமே. அதோடு அவள் தந்தையளிக்கும் சீதனமும் அவள்பெயரிலேயே யிருக்கட்டுமென்று மாப்பிள்ளை கூறினான்.

இதைக்கேட்ட செல்வராயர் மிக்க சந்தோஷமடைந்து நமது கௌரவத்திற்கு இன்னும் அதிகமாய்க் கொடுப்பதே தகுதியென்றெண்ணி இலட்சம்பவுன் தன் புத்திரிக்குச் சீதனமாகப்பத்திரத்தில் குறிக்கும்படி லாயரிடம் கூறினார். மணமகன் இதைக்கேட்டதே மனம் பூரிப்படைந்தான். அவன் சந்தோஷத்திற்களவேயில்லை.

மேற்கண்டவாறு சீதனவிஷயம் இருகட்சிக்கும் சந்தோஷமாய் முடிந்ததே யாவரும் கோயிலுக்குப் புறப்பட்டார்கள். அக்கூட்டத்தின் உடையணி முதலியவற்றின் ஆடம்பரம் மிக்க நேர்த்தியாயிருந்தது. வீதியில் திரளான ஜனங்கள் வேடிக்கைபார்க்கக் கூட்டமாய்க்கூடி நின்றார்கள். வீதியிலுள்ள வீடுகளின் சாளரங்களிலெல்லாம் ஜனங்கள் நெருக்கமாய் நின்று வேடிக்கைபார்த்தார்கள். கலியாணத்திற்குச் செல்கிறயாவரும் அழகியபுரவிகள் பூட்டப்பட்ட இரதங்களில் ஏறிக்கோயிலுக்குப் போய்ச்சேர்ந்தார்கள். கோயிலுக்குள்ளே நுழையும்போது கமலாம்பாளுக்குப் பாழும் வீட்டிற்குள் நுழைவதுபோலிருந்தது. ஆயினும் அவள் தன் திகிலையும் துயரையும் வெளியிற் காட்டாமலே யிருந்தாள்.

கடைசியில் மணமகனும் மணமகளும் பலிபீடத்தி னெதிரிற் சென்று நின்றார்கள். ஆச்சு, குருவும் கலியாணச்சடங்கைத் தொடங்கப்போகிறார். அச்சமயம் மூடப்பட்டிருந்த கோயிலின் வெளிக்கதவு மும்முரமாய்த் தட்டப்பட்டதும் யாவரும் திரும்பிப்பார்த்தார்கள். காவலாட்களில் ஒருவன் கதவைத் திறந்தான். உடனே பூரணமாய் பளபளப்பான கவசமணிந்த ஓர் வீரன் சரசரவென்று உள்ளே நுழைந்தான். அவன் முகமும் கவசத்தால் மூடப்பட்டிருந்தது. அவன் நேராய் பலிபீடத்தருகில் சென்று மணச்சடங்கை யாரம்

பிக்க முயலும் குருவை விளித்து " இச்சடங்கு நடக்கலாகாது. உடனே நிறுத்தப்படவேண்டும் " என்று அதிகாரத் தொனியா யியம்பினுன். குரு "என்ன காரணத்திற்காக நிறுத்தப்படவேண்டும்" என்றூர்.

அந்த வீரன் " இதோ விதற்காக " என்று நன் ஜேபியிலிருந்த ஒரு சிறு கூந்தல் முடிச்சை யெடுத்துக்காட்டினுன்.

அதைக் கண்டதும் கமலாம்பாள் கோவென்றலறிப் பக்கத்திலிருந்த அரிய நாயகிமேல் மூர்ச்சையாய்ச் சாய்ந்துவிட்டாள்.

முதலில் அந்த வீரன் உள்ளேவந்தபோதே செல்வராயர் முகம் வெளுத்துவிட்டது. யாவரும் ஒருவர்முகத்தை யொருவர்பார்த்தார்கள். ஆனுல் அவன் அக்கூந்தல் முடிச்சைக்காட்டியதே ஒரு சங்கதியும் அறியாதவர்கள் கூட இதில் ஏதோ பூர்வசரித்திரம் இருக்கிறதென்று யூகித்துக்கொண்டார்கள்.

செல்வராயர் தன் தமக்கையையும் அரியநாயகியையும் நோக்கிக் கமலாம்பாளை யொருபக்கமாய் அழைத்துப்போகும்படி கூறிவிட்டு அந்த வீரன்பக்கமாய்த் திரும்பினுர். அதற்குள் அவன் பலிபீடத்தருகில் சென்று அங்கிருந்தவர்களைக்கண்டதே மணமகனை யுற்றுநோக்கினுன். உடனே செல்வராயரருகில் வந்து " ஒரு வார்த்தைகூட பேசவேண்டாம். நான் முன்னே ஒன்று கூறுகிறேன் " என்ருன்.

செல்வராயர், கோபத்தோடு, " இல்லை. பேசவேண்டியவன் நான். என் கூடவா. உன் பிரமாணவார்த்தை..." என்று மெதுவாய்க்கூறினுர். வீரன் "நான்வார்த்தை தவறி நடக்கவில்லை. உன்செவியில் ஒரேவார்த்தை கூறுகிறேன். அப்போது நீ எப்படிப்பட்ட படுகுழியில் விழப்போனுயென்பதையுணர்ந்து உன்னை நீயே சபித்துக்கொள்வாய். அடநிர்ப்பாக்கிய மனிதனே. என்னகாரியம் செய்துவிடவிருந்தாய்..." என்று அவர்செவியில் இரண்டொரு வார்த்தைகளைக் கூறிவிட்டுக் சட்டென் செல்வராயரின் தோட்களைப் பற்றிக்கொண்டு அவர் ஆத்திரத்தால் சத்தமிடாமல்படி யடக்கிவிட்டு, உடனே கோயிலைவிட்டுப் புறப்பட்டு வெளியில் நின்றிருந்த குதிரைமேலேறி காற்றினும் வேகமாய்ப் போய்விட்டான். வீதியில் கூட்டமாய் நின்றிருந்த ஜனங்கள் என்னமோ அசாதாரணமான சம்பவம் நேர்ந்திருக்கிறதென்று எண்ணினுர்கள்.

பலிபீடத்தருகி லிருந்தவர்களுக்கு அவ்வீரன் கூறியது இன்னது என்று தெரியாதேனும் அதைக்கேட்ட செல்வராயர் மிக்க மாறுதலான உணர்ச்சியடைந்திருக்கிருர் என்றுமட்டு முணர்ந்தார்கள். செல்வராயர் அவர்களை நோக்கி,

"நண்பர்களே! சிலகாரணங்களால் இக்கலியாணச்சடங்கு இன்று நடைபெற முடியாது. முதலாவது என் புத்திரி மூர்ச்சை யடைந்திருக்கிருள். கலியாணப் பிள்ளைக்கு நான் தகுந்த காரணம் கூறவேண்டும். அதைத் திருப்திகரமாய்க் கூறுவேன். நீங்கள் இதைபபற்றி ஒரு அபிப்பிராயமும் கொள்ளவேண்டாம். நீங்களனைவரும் சிநேகிதர்களானதால் பின்னுல் உங்களுக்கு விஷயத்தைக் கூறுவேன் " என்ருர்.

குரு:—" இது தடைப்பட்டதன் காரணம் எதுவாயிருந்தாலும் இன்று இதை நிறுத்தி வைப்பது தான் மிக்க நலமானது " என்ருர்.

அரியநாயகியும் தங்கம்மாளும் கமலாம்பாளை யொரு அறைக்குக் கொண்டு போய் உபசாரம் செய்துகொண்டிருந்தார்கள். அரியநாயகி "எனக்கென்னமோ ஆதிமுதல் இது கெடுதியாய் முடியுமென்றே பயமாயிருந்தது. இதற்கு நாம் சம்மதித்ததே தவறு " என்ருள்.

தங்கம்மாள் "உண்மையே. ஆயினும் நாம் எல்லாம் நன்மையாகவே முடியுமென்று நம்பி யிருந்தோம் என்பது ஒரு ஆறுதல்" என்றாள்.

சற்றுநேரங் கழித்து கமலாம்பாளுக்கு ஸ்மரணை வந்தது. கண்களைத் திறந்து பார்த்தாள். நடந்த சங்கதி யாவும் நினைப்பிற்கு வந்ததே எழுந்து உட்கார்ந்து ஓர் சந்தோஷக் கூச்சலிட்டதும் எழுந்து துரிதமாய் கதவைத் திறந்து கொண்டு வெளியிற் செல்லப்போனாள். தங்கம்மாள் "குழந்தாய், இரு இரு என்ன செய்யப்போகிறாய்" என்று கூவிக்கொண்டே பின்னால் தொடர்ந்தாள். கமலாம்பாள் சட்டென்று திரும்பி "கடைசியில் அவர் வந்து விட்டார். கண்ணபிரான் தான் அந்த ஆள்" என்றாள்.

அதே நிமிடம் செல்வராயர் அறைக்குள் வர கமலாம்பாள் அவரைக் கண்டதும் "அப்பா அம்மனிதனை மணம்புரியும்படி என்னைக் கட்டாயப்படுத்தாதே. என்னால் முடியாது" என்றாள்.

செல்வராயர் "இல்லை யில்லை. கடவுளறிய அவனுக்கு உன்னை மணம் புரியமாட்டேன். இது உண்மை" என்றார்.

இம்மொழியைக்கேட்டதே கமலாம்பாளுக்கு ஆனந்தமாய்விட்டது. "ஆனால் கண்ணபிரான், கண்ணபிரான்" என்றாள். செல்வராயர் "குழந்தாய், ஆத்திரப்படாதே. நாம் நமது கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள உடனே மாளிகைக்குத் திரும்பிவிடவேண்டும். ஆகையால் நீ பேசாமல் வரவேண்டும். யாவும் பிறகு பேசிக்கொள்ளலாம்" என்று கூறினார்.

உடனே யாவரும் புறப்பட்டு மாளிகை போய்ச்சேர்ந்ததும் கமலாம்பாள் தன் அறைக்குச்சென்றார். செல்வராயர் யாவரையும் நோக்கி "நண்பர்களே, நீங்கள் தயவுசெய்து விருந்தருந்துங்கள், நான் நமது மணமகனாகிய லோகநாயகனுக்கு கலியாணம் தடைபட்ட காரணத்தைக் கூறிவிட்டுவருகிறேன்" என்று கூறிவிட்டு அவ்வாலிபனை யழைத்துக்கொண்டு ஒரு அறைக்குச் சென்றார்.

இருவரும் அறைக்குட் சென்றதே செல்வராயர் கதவைமூடி யுட்பக்கம் தாளிட்டுக்கொண்டு அவ்வாலிபனை நோக்கி மிக்க கோபத்தோடு, "பாமசண்டாளப்பயலே, உனக்கு என்ன தண்டனைதான் விதிக்கலாகும்" என்றார்.

வாலிபன் ஏதோ வியப்படைந்தவன்போல் அபிநயித்து, "பிரபுவே! என்ன ......" என்பதற்குள், செல்வராயர், அடே கள்ளப்பயலே, இனியும் பாசாங்கு செய்தாயோ தூக்குமரத்திற் கனுப்பிவிடுவேன் கட்டாயம். எனக்குக் கோப மூட்டாதே. நீ பொய்த்தாடி வைத்துக்கொண்டிருந்தாலும் அவன் உன்னைக் கண்டவுடனே எப்படியோ தெரிந்துகொண்டான். ஆகையால் ஓ பலராமா! நீ யென்னவிடை யளிக்கிறாய் கூறு" என்றார்.

லோகநாயகன் என்று மாறுவேட மணிந்து மேற்கண்டவாறு செல்வராயருக்குப் பெருந்தீங்கு செய்யமுயன்றவன் கடற் கொள்ளைக்காரனாகிய தேவதத்தன் என்ற கப்பித்தானுடைய புத்திரனை பலராமன் என்ற துஷ்டனே.

அவன் செல்வராயரைநோக்கி "என்னை யுடனே இதைவிட்டுப்போய்விட அனுமதி யளித்துவிட்டால் நான் இச்சங்கதியை வெளியில் யாரிடமும் கூறாமற் போய்விடுகிறேன்" என்றான்.

செல்வராயர் "அடே, நீ மறுபடி யிந்த நகரிற்றலைகாட்டினாயோ என் மானம் போனாலும் சரி எதுபோனாலும் சரி, உன்னைத் தட்சணம் பிடித்துக் கொடுத்துவிடுவேன்" என்று மிக்க தீட்சண்யத்தோடு கூறினார். அத்துஷ்டன் அவ்வாறே நடந்துகொள்கிறேன் என்று கூறிவிட்டு உடனே பின்புறவழியாய் மாளிகையைக்கடந்து துரிதமாய்ப் போய்விட்டான். அவன் சென்றதே செல்வராயர் தன் அறைக்குட்சென்று துயரமான சிந்தனையி லிருந்தார். (இ-ம்.)

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

## பிங்கள ௵ சித்திரை௴ சாலிவாகன 1839, கலியுகாதி 5018,

## பசலி 1326-27, கொல்லம் 1092-93,

## இங்கிலீஷ் 1917-ம் ௵ ஏப்ரல்—மே௴

| ஏப்ரல்௴ | சித்திரை௴ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 13 | 1 | வெ | சஷ்-22-26 | மூல-22-16 | அமி 26 சி | தமிழ் வருஷப்பிறப்பு |
| 14 | 2 | ச | சப்-17-11 | பூரா-22-46 | அமிர் 60 | புது அடுப்புபோட |
| 15 | 3 | ஞா | அஷ்-11-35 | உத்தி-18-59 | அமிர்த 60 | தனியநாள் |
| 16 | 4 | தி | நவ-5-37<br>தச-53-56 | திரு-14-57 | அ 15 சித் | 4-க்குள் சிம்மம் நாமகரணம் |
| 17 | 5 | செ | ஏகா-53-43 | அவி-10-51 | சித் 11 மர | கிழக்கு பிரயாணம் |
| 18 | 6 | புத | துவ-48-11 | சதை-6-57 | சி 3 அமி | கரிநாள் |
| 19 | 7 | வி | திர-43-3 | பூரட்-3-21 | சித்த 60 | புது வஸ்திரம் தரிக்க |
| 20 | 8 | வெ | சது-38-45 | உத்தி-0-17 | அமி 60 | புது தானியம் சேர்க்க |
| 21 | 9 | ச | ● அமா 35-13 | அசு-56-38 | சித்த 60 | அமாவாசை விரதம் |
| 22 | 10 | ஞா | பிர-32-48 | பர-56-21 | சித்த 60 | எருதுகளைக்கட்டி ஏர் உழ |
| 23 | 11 | தி | துதி-31-23 | *கார்-57-11 | மர 57 அ | கிருத்திகைவிரதம் |
| 24 | 12 | செ | திரி-31-17 | ரோக-59-36 | அமி 60 | ரிஷபம் ஏர் உழ |
| 25 | 13 | புத | சது-32-24 | மிரு-60-0 | சித்த 60 | பசுக்களை கட்ட |
| 26 | 14 | வி | பஞ்-34-51 | மிரு-2-39 | மரண 60 | எம்பெருமானார்சாத்துமுறை |
| 27 | 15 | வெ | சஷ்-38-17 | திரு-7-11 | சித்த 60 | சஷ்டி விரதம் |
| 28 | 16 | ச | சப்-42-36 | புன-12-39 | சித்த 60 | தெற்கு பிரயாணம் |
| 29 | 17 | ஞா | அஷ்-47-28 | பூச-18-46 | சித்த 60 | ருதுசாந்திசெய்ய |
| 30 | 18 | தி | நவ-52-36 | ஆயி-25-12 | சித் 25 மர | ஜபம் பூர்த்திசெய்ய |
| 1 | 19 | செ | தச-57-23 | மக-31-32 | சித்த 60 | மந்திரப் பிரயோகம்செய்ய |
| 2 | 20 | புத | ஏகா-60-0 | பூர-37-22 | அமி 60 | தனியநாள் |
| 3 | 21 | வி | ஏகா-3-24 | உத்-44-11 | மர 44 சித் | விவாகம் |
| மே௴ 4 | 22 | வெ | துவா-4 51 | அஸ்-46-39 | அமி 47 சி | வித்தியாப்பியாசம் |
| 5 | 23 | ச | திரு-6-58 | சித்-49-39 | மர 50 அ | ஆபரணம் தரிக்க |
| 6 | 24 | ஞா | சது-7-57 | சுவா-51-19 | அமி 51 ம | பும்ஸவனம் |
| 7 | 25 | தி | ○ பௌர்7-34 | விசா-51-41 | மர 52 சித் | |
| 8 | 26 | செ | பிர-5-49 | அனு-50-59 | சித்த 60 | 7½-க்குள் ஏர் உழ |
| 9 | 27 | புத | துதி-2-51 | கேட்-49-17 | சித் 49 மர | கிரகப்பிரவேசம் |
| 10 | 28 | வி | சது-53-22 | மூல-46-42 | சித்த 60 | பல விருக்ஷம் நட |
| 11 | 29 | வெ | பஞ்-50-44 | பூரா-44-43 | சித்த 60 | முத்துபவழம் வாங்க |
| 12 | 30 | ச | சஷ்-43-40 | உத்தி-39-43 | சித்த 60 | பூமுடிக்க |
| 13 | 31 | ஞா | சப்-37-41 | திரு-35-57 | அமி 36 ம | ருதுசாந்தி செய்ய |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS